Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-25 | 11-10-2004 | திங்கட்கிழமை | ஓசை -236

க ணே சா ந கை ய க ம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10478)

இலவசப் பிரதி

-தமிழீழ பெண்கள் எழுச்சிநாளும், 2ஆம் லெப் .மாலதியின் நினைவு நாளும்-

# தமிழர் தாயகமெங்கும் பெரும் எழுச்சியுடனும் பல்வேறு நிகழ்வுகளுடனும் நடந்தேறியது!

## பல்லாயிரம் மக்கள் கலந்துகொண்டனர்


(நமது நிருபர்)

**தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும் 2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளும் தமிழர் தாயகமெங்கும் பெரும் எழுச்சியுடனும் பல்வேறு நிகழ்வுகளுடனும் நடந்தேறியது. இந்நிகழ்வுகள் பேரணிகள், பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்வுகளுடன், கிளிநொச்சியில் இடம்பெற்ற பெரும் வரலாற்றுக் கண்காட்சி என்பனவற்றோடு எழுச்சியுடன் நடந்தேறியது.**

2ஆம் லெப்- மாலதியின் 17ஆம் ஆண்டின் நினைவு நாள் நிகழ்வும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வும் மாலதி வீரச்சாவடைந்த கோப்பாய் தரவைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் பிற்பகல் 5.30 மணிக்கு ஆரம்பமான அஞ்சலி நிகழ்வுடன் தொடங்கியது.

சுட்டுறவுப் பெண்கள் விவகாரக் குழுத் தலைவி திருமதி வேத வல்லி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாலதியின் தந்தை யார் பேதுரு பொதுச்சுடரேற்றி மாலதியின் திருவுருவச் சிலை (நடுகல்)யிற்கு மலர் மாலை அணி

(02 ஆம் பக்கம் பார்க்க)


திருமலையில்.... படம்:-குருநாதன்

## 2ஆம் லெப். மாலதியின் உருவச்சிலை இரணைமடுச்சந்தியில் திறப்பு!

2ஆம் லெப் மாலதியின் நினைவு நாளாகிய நேற்று 2 ஆம் லெப். மாலதியின் உருவச்சிலையும் திரைநீக்கம் செய்துவைக்கப் பட்டது.

ஏ-9 நெடுஞ்சாலையின் இரணைமடு சந்திக்கருகில் அமைக் கப்பட்ட இவ்வுருவச் சிலை திரை நீக்க நிகழ்வின் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் அவர்களும் மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி பொன். தியாகம் அவர்களும், ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் ஏற்றினார். தொடர்ந்து உருவச் சிலைக்கான நினைவுக்கல்லினை கட்டளைத் தளபதி கேணல் தீபன் அவர்கள் திரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் கனடாவின் பங்களிப்பு மிக அவசியம்

### நோர்வே சமாதானத்தூதுவர் எரிக் சூல்ஹெய்ம்


இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் கனடிய அரசாங்கத்தின் பங்களிப்பு மிகவும் அவசியம் என நோர்வேயினால் வலியுறுத்தப்பட் டுள்ளது.

வட அமெரிக்காவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் கனடியப் பாராளுமன்ற உறுப்பினர் மரியா மின்னாவை சந்தித்த போது இதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இலங்கை-கனடா பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையின் தலைவரான மரியா மின்னாவின் ஒட்டாவாப் பாராளுமன்ற அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பில் கனடாவிற்கான நோர்வேத் தூதுவர் லிபரல் கட்சியின் பிரதேசத் தலைவர் கணேசன் சுகுமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் ஜூட்டின் வித்துடல் பூரண மரியாதையுடன் விதைப்பு

அக்கரைப்பற்றில் நேற்று முன் தினம் தேச விரோதிகளின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவடைந்த ஜூட் எனும் மாவீரரின் வித்துடல் காஞ்சிரங்குடா கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் புனித விதை குழியில் விதைக்கப்பட் டது.

முன்னதாக காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து வித்துடல் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு தம்பிலுவில் கலை மகள் வித்தியாலயம், விநாயகபுரம் சக்தி வித்தியாலயம் என்பவற்றில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. வீரவணக்க நிகழ்வுகளில் தளபதி ஜனார்த்தன், தளபதி மதுரகவி ஆகியோர் உட்பட போராளிகள், பொது மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

## வெளிநாட்டு அறிஞர்களுடன் புலிகள் ஆஸ்திரியாவில் கருத்துப் பரிமாறல்!

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் அவர்கள் தலைமையிலான அரசியல் குழுவினர் ஆஸ்திரியாவில் சமாதானத்திற்கும் இன முரண்பாட்டுத் தீர்வுக்குமான கற்கை மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இரண்டாவது நாள் கருத்தரங்கில் நேற்று முன் தினம் கலந்துகொண்டனர். "ரொண்ஸ்சென்" என்ற சமாதானத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச அமைப்பின் பணிப்பா ளர் பேராசிரியர் யோகான் ஹெல்ரஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இதன்போது சுயாட்சி அமைப்புக்குறித்தும் முரண்பாட்டுத் தீர்மானங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. இவ்விவகாரங்கள் குறித்து யோகான் ஹெல்ரஸ் விளக்கியுள்ளார். இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்த அனைவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் நன்றி தெரிவித்த தமிழ்ச்செல்வன் பேராசிரியர் யோகானுக்கும் நன்றி தெரிவித்தார்.

அதேவேளை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பேராசிரியர் யோகான் இலங்கையின் சமாதான

(12 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு

# திருமலையில் ஏற்றிய தேசியக் கொடியை இறக்க அமைப்பாளர்கள் மறுப்பு

(திருகோணமலை)

திருகோணமலை சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி வளவில் நேற்று தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையொட்டிய நிகழ்வின் போது ஏற்றப்பட்ட தமிழீழ தேசியக் கொடியை இறக்கவேண்டுமென்று திருகோணமலை பொலிசார் அங்கு வந்து நிகழ்வின் ஒருங்கமைப் பாளர்களைக் கேட்டனர். அதற்கு நிகழ்வை ஒழுங்குசெய்த மாதர் சங்கங்களின் ஒன்றியத் தலைவி திருமதி கண்மணி இரத்தினவடிவேல் மறுப்புத் தெரிவித்தார். நிகழ்வில் பங்குபற்றிய பாராளுமன்ற உறுப்பினர் க.துரை ரெட்ணசிங்கமும் பொலிசாருடன் இது பற்றிப் பேசினார். தாம் கொடி யேற்றப்பட்ட விவகாரம் பற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறையிட்டிருப்பதாகப் பொலிசார் தெரிவித்தனர். பின்னர் கண்காணிப்பு உறுப்பினர் ஒருவர் கொடியேற்றப்பட்டிருந்த இடத்திற்கு வந்தார். நிலைமையை அவதானித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினரின் கவனத்திற்கு பொலிசார் கல்லூரி வளவிற்குள் பிரவேசித்திருப்பது குறித்து மாதர் சங்கப் பிரமுகர்கள் கொண்டு வந்தனர். அதையடுத்து பொலிசாரை பாடசாலைக்கு வெளியே நிற்கும்படி கண்காணிப்புக்குழு உறுப்பினர் கேட்டுக் கொண்டார். அதன் பின்னர் அவர் மாதர் சங்கத் தலைவி கண்மணி இரத்தினவடிவேலுடன் கொடியை இறக்குவது பற்றிப் பேசினார். நிகழ்வு முடியும் வரை கொடியை இறக்க முடியாதென்று மாதர் சங்கத் தலைவி திட்டவட்டமாகத் தெரிவித்ததுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கொடியேற்றப் படக் கூடாதென்பதை வலியுறுத்தும் விதி எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டார். ஆரம்பத்தில் ஏற்றப்பட்ட கொடி, நிகழ்வு முடிந்த பின்னரே இறக்கப்பட்டது. (25)

## மன்னார் நகரைச் சுத்தமாக்க பிரதேச சபை நடவடிக்கை

மன்னார் நகரிலுள்ள குப்பை கூழங்களை அகற்றும் முகமாக "எமது நகரத்தை நாமே சுத்தம் செய்வோம்" என்ற தலைப்பில் பிளாஸ்ரிக் பொலித்தீன் என்பனவற்றை மன்னார்ப் பிரதேச சபையினர் கொள்வனவு செய்து நகரத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## வவுனியாவில் சின்னமுத்து தடுப்பு மருந்தேற்றல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா பொது வைத்தியசாலையில் சின்னமுத்து, ருபெல்லா தடுப்பு மருந்தேற்றல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 16 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் இத் தடுப்பு மருந்தேற்றப்பட்டது. அச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கும் முகமாகவே இத் தடுப்பு மருந்தேற்றல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளத் தவறியவர்கள் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து தடுப்பு மருந்தைத் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட சுகாதாரப்பிரிவினர் கேட்டுள்ளனர். (10)


வரிவிளம்பரம்

**இறப்பர் முத்திரை**

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி.

T.P. 021-2285750 (சி-10551)

**விற்பனைக்குண்டு**

49-தொடர் இலக்கமுள்ள உழவு இயந்திரமும் பெட்டியும் விற்பனைக்குண்டு தொடர்புக்கு:- இல.09, 4ஆம் குறுக்கு, 8ஆம் வாய்க்கால், உருத்திரபுரம்.(4924)






லெப்.கேணல் திலீபன் கேணல் சங்கர், 2ஆம் லெப். மாலதி, லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல் குமரப்பா உட்பட 12வேங்கைகள் ஆகியோரை நினைவு கூரும் எழுச்சி நிகழ்வு நேற்றுமுன்தினம் கனடாவில் நடை பெற்றது. இதில் உலகத்தமிழ் உறுப்பினர்கள் உரையாற்றியதுடன் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வு கலைபண்பாட்டுக்கழகத்தின் சார்பில் நடைபெற்றது.

(படங்கள் தகவல் எழில்)

## மன்னாரில் ஞாயிறு தினங்களில் வர்த்தக நிலையங்களை மூட முடிவு

மன்னாரில் இனி ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்கள் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களின் வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்படுவது போல் மன்னாரிலும் இனிமேல் ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களை மூடுமாறு அவ்அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.(மி)

### தமிழர் தாயக....

வித்து அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து மாலதியின் பெரிய அளவிலான உருவப்படம் ஊர்வலமாக கோப்பாய் வீதியூடாக எடுத்து வரப்பட்டு கோப்பாய் கந்தசுவாமி கோவிலின் முன்றலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அங்கு பொதுச்சுடரை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சி.தேவா ஏற்றி வைக்க, யாழ். மாவட்ட மகளிர்அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். மாலதியின் திருவுருவப்படத்திற்கு மேஜர் சோதியாவின் தாயார் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினர், பொதுசன அமைப்புக்களின் பிரதிநிதிகளின் நினைவுரைகளும் இடம்பெற்றன.

### கிளிநொச்சியில்...

கிளிநொச்சியில் நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக காலை 9.00 மணியளவில் இலங்கைத் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அவர்கள் பொதுச்சுடரினை ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை போர்ப்பயிற்சி மகளிர் பொறுப்பாளர் அஜந்தினி அவர்கள் ஏற்றினார். தொடர்ந்து 2 ஆம் லெப். மாலதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை மருத்துவப்பிரிவு மகளிர் பொறுப்பாளர் தழல் அவர்கள் ஏற்றிவைக்க, மலர் மாலையினை 2 ஆம் லெப்.மாலதியின் தந்தையாரான பேதுறுப்பிள்ளை அவர்களும், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி அவர்களும் அணிவித்த[illegible] தமிழீழ மாவீரர் பணிமனை துணைப்பொறுப்பாளர் அர்ச்சனா தலை[illegible]மயில் நடைபெற்ற இந்நிகழ்வினைத் தொ[illegible]டர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினரால் ஒழுங்கமைக்கப்பட்ட படைக்கலக் கண்காட்சியினை ஐந்தாவது நாளாகிய நேற்றும் தமிழீழத்தின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் வருகை தந்து பார்வையிடத் தொடங்கினர்.

தொடர்ந்து இறுதிநாள் நிகழ்வைச் சிறப்பிக்கும் இரவு கலைநிகழ்வுகள் ஆரம்பமாகின. கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமை தாங்கினார். ஆரம்ப நிகழ்வாக நுண்கலை மன்றக்கலைஞர்களின் மாவீரர் அஞ்சலி நடனமும், அம்மன்றக் கலைஞர்களின் தேசியத்தலைவர் வாழ்த்து நடனமும் இடம் பெற்றன. தொடர்ந்து தலைமையுரை யினை அடுத்து சோதியா படையணியினரின் கலை நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து மகளிர் கலைபண்பாட்டுக் கழகத்தினரின் சங்கநாத நிகழ்வுடன் மகளிர் இசைக் குழுவினரின் இன்னிசைக் கானமும் இருமேடைகளில் நடைபெற்றன. மகளிர் இசைக்குழுவில் பாடல் வழங்க அதற்கேற்ப நடனத்தை அடுத்த மேடையில் நடாத்தினார்கள். இரு மேடைகளிலும் சிறப்புமிக்க காட்சிகளைப் பெருந்திரளான மக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர். தொடர்ந்து அரசியல்துறை மகளிர்பொறுப்பாளர் தமிழினி அவர்களுடைய உரை இடம்பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியின் சிறப்பு வெளியீடான "அக்கினிப் பறவைகள் பாகம்-02" என்ற இசைத்தட்டினை சோதியா படையணியின் சிறப புத்தளபதி கேணல் துர்க்கா வெளியிட்டுவைக்க மாவீரர் கிண்ணியின் தாயார் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதியினை கடற்புலிகளின் மகளிர் சிறப்புத் தளபதி விடுதலை வழங்க வர்த்தகர்களும் பொது மக்களும் பெற்றுக் கொண்டனர். அடுத்து சோதியா படையணியின் நாட்டிய நடனமும் அதைத் தொடர்ந்து, யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர் கஜேந்திரன் அவர்களின் உரையினைத தொடர்ந்து, தமிழீழ மகளிர் இசைக்குழு வினரின் இன்னிசைக் கானங்கள் தொடர்ந்து இடம்பெற இரவுக் கலைநிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன.

### திருமலையில்...

இதேவேளை திருகோணமலை மாவட்டதில் நேற்றுக் காலை மாபெரும் எழுச்சிப் பேரணியும் தொடர்ந்து சிறப்புரைகளும் இடம்பெற்றன.

திருகோணமலை பத்திரகாளி கோவில் முன்றலில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் வித்தியாலய வீதி, வித்தியாலய ஒழுங்கை, இராஜவரோதயவீதி வழியாக சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரியை வந்தடைந்தது.

அங்கு திருமலை மாதர் சங்கங்களின் ஒன்றியத்தலைவி திருமதி கண்மணி இரத்தினவடிவேல் தலைமையில் எழுச்சி நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் ஆகியோரின் சிறப்புரைகள் இடம் பெற்றன.

### முல்லை மாவட்டத்தில்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் நிகழ்வுகள் பிற்பகல் 4.30 மணியளவில் புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமான எழுச்சி ஊர்வலத்துடன் தொடங்கின.

மாணவிகளின் அணி வகுப்பு, கோலாட்டம் என்பனவற்றுடன் 2ஆம் லெப்- மாலதியின் பிரமாண்டமான உருவப்படத்தை தாங்கியவாறு பெண்கள் அணிவகுத்துச் செல்ல ஊர்வலம் மாலதி விளையாட்டரங்கைச் சென்றடைந்தது.

அங்கு புதுக்குடியிருப்புப் பிரதேச மாதர் சங்கத் தலைவி ம.வானதி தலைமையில் ஆரம்பமாகிய அரங்க நிகழ்வில் பொதுச் சுடரை முல்லை. மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுக் நிறுவனப் பொறுப்பாளர் நிரஞ்சனா ஏற்றி வைக்க, தேசியக் கொடியை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மாலதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை மாவட்டத் தொழிற் சங்கப் பொறுப்பாளர் பிறையாளன், கிராம அலுவலர் சிவராசா ஆகியோர் ஏற்றி வைத்தனர். மலர்மாலையினை முல்லை. மாவட்ட காவல்துறைப் பொறுப்பாளர் ரஞ்சித்குமார் அணிவித்தார். கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசங்களில் மாலதி நினைவு நாளும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும் சிறப்புறக் கொண்டாடப்பட்டன.

மல்லாவி மாவீரர் மண்டபத்தில் காலை துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் புனிதன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை மல்லாவி வர்த்தக சங்கத் தலைவர் தர்மலிங்கம் ஏற்றி வைக்க, முல்லை- மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்.

மாலதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை மாவீரர் மேஜர் மலரவனின் தந்தையார் த.சுந்தரலிங்கம் ஏற்றி வைக்க மாவீரர் கரும்புலி மேஜர் மொரிஸ்ஸின் தந்தையார் தர்மகுலசிங்கம் மலர் மாலை அணிவித்தார். நினைவுரைகள், சிறப்புரைகள் என்பன இடம்பெற்றன.

பாண்டியன்குளப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வில் வர்த்தக சங்கத் தலைவர் பகீர் பொதுச்சுடரை ஏற்றி வைக்க, பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். ஈகச்சுடரை 2ஆம் லெப்ரினன்ட் சாரதியின் தந்தையார் இரத்தினம் ஏற்றி வைக்க நூலக ஆசிரியர் மலர் மாலையினை அணிவித்தார்.

ஒட்டுசுட்டான் கோட்டத்தில் கற்சிலைமடு அ.த.க பாடசாலையிலும் மாலதி நினைவு நாள் நிகழ்வும், பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வும்நடைபெற்றன.

### மன்னாரில்...

மன்னாரில் நானாட்டான் விளையாட்டரங்கிலும் அடம்பனில் ஆண்டான்குளம் விளையாட்டரங்கிலும், மட்டக்களப்பில் அரசடித்தீவு பொதுவிளையாட்டு மைதானத்திலும் 2ஆம் லெப்.மாலதியின் நினைவு நாள் மற்றும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகள் சிறப்புற நடந்தேறின.

### மட்டக்களப்பில்...

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரடியனாறிலிருந்து ஆரம்பமாகிய 2-ஆம் லெப். மாலதி அவர்களின் உருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி அரசடித்தீவு பொதுமைதானத்தை வந்தடைந்தது.

ஈகச்சுடரினை மட்டு -அம்பாறை மாவட்ட நிர்வாகசேவைப்பொறுப்பாளர் தயாமோகன் ஏற்றிவைக்க. தேசிக்கொடியினைத் தளபதி ராம் ஏற்றிவைத்தார்

நிகழ்வில் தளபதி சுரேஸ், மட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தங்கேஸ்வரி, அரியநேத்திரன், ஜெயானந்தமூர்த்தி, அம்பாறை மாவட்ட பா.உ பத்மநாதன் ஆகியோர் உரையாற்றினர். நன்றி உரையை மட்டு -அம்பாறை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி ஆற்றினர்.

### வவுனியாவில்...

வவுனியாவில் இந் நிகழ்வுகள் நேற்று மாலை பேரணியுடன் ஆரம்பமாகி பூந்தோட்டம் பொது விளையாட்டு மைதானத்தில் அரங்க நிகழ்வுகள் நடந்தேறின. சிறப்புரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. "அக்கினிப்பறவைகள்" பாகம்-2 விவரண வெளியீட்டு நிகழ்வும் வவுனியாவில் இடம் பெற்றுள்ளது. (08,24,25,27,(கு.ச.தீ.)

# அடுத்த ஐந்து முதல் பத்துஆண்டுகளில் ஜப்பான் படைவீரர்களின் எண்ணிக்கையைக் குறைக்கத்திட்டம்

## ஜப்பான் சஞ்சிகை தகவல்

(டோக்கியோ)

**அடுத்த 5 முதல் 10 ஆண்டுகளில் தனது தரைப்படையில் 25 சதவீதத்தைக் குறைக்க ஜப்பான் திட்டமிட்டுள்ளது. பயங்கரவாதத் தாக்குதல்கள் உள்ளிட்ட புதிய அச்சுறுத்தல்களைச் சந்திக்கும் வகையில் படைகளைச் சீர்திருத்தம் செய்யவும் அந்நாடு முடிவு செய்துள்ளது.**

தற்போது உருவாக்கப்பட்டுள்ள புதிய பாதுகாப்புக் கொள்கையின் படி இத்திட்டங்கள் செயற் படுத்தப் படும் என்று வணிக நாழிதழ் "நிஹான் கீஜை ஷிம்பன்" சனிக் கிழமை செய்தி வெளியிட்டுள்ளது. தற்போது ஜப்பானில் தரைப் படையில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் வீரர்கள் உள்ளனர். அவர் களில் 40 ஆயிரம் பேரை பணியில் இருந்து விடுவிக்க அரசு திட்ட மிட்டுள்ளது. தற்போது இராணு வத்தில் உள்ள 900 டாங்கிகள் 450 ஆகக் குறைக்கப்படும். 300 போர் விமானங்களில் 30 சதவீதம் குறைக்கப்படும். பனிப்போர் காலத்தில் சோவியத் யூனியனின் அச்சுறுத்தலைச் சந்திக்க அந் நாட்டை நோக்கி நிறுத்தப்பட்டிருந்த படைப்பிரிவுகள் வேறு இடங் களுக்கு மாற்றப்படும். 'படை யெடுப்பு அச்சுறுத்தல் இல்லாத நிலையில் கனரகக் கருவிகளைக் கொண்ட படைப்பிரிவுகளைக் குறைத்து விடலாம். பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்க்கும் வகை யில் இராணுவ அமைப்பை மாற்ற வேண்டும் என்று பிரதமரின் ஆலோசனைக் குழு தெரிவித் துள்ளது.

# வீரத்தைக்காட்டுவதாக நினைத்து மனைவி முன் நாடகமாடியவர் கைது

(காட்மணடு)

மனைவியின் முன்பு வீரத்தைக் காட்ட நினைத்த கூலியாட்கள் மூலம் கொள்ளை நாடகம் நடத்திய கணவர் பொலிசில் சிக்கினார். ஏக்லஹோமாசிட்டி என்ற இடத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. பிடிபட்ட வரின் பெயர் கிரண்ட் ஸ்பென்சர் (வயது-27) பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவருடைய மனதில் வினோத ஆசை ஒன்று தோன் றியது. தான் வீரம் மிக்க கணவர் என்பதை மனைவி முன் நிரூபித்துக் காட்ட நினைத்தார். இதற்காக இரண்டு மாணவர்களின் உதவியை நாடினார். வீட்டில் கொள்ளை நடப்பதுபோலவும் அவர்களிடம் சண்டைபோட்டு ஜெயிப்பது போல வும் நாடகம் ஆடத் திட்டமிட்டனர். அவர்கள் கற்பனையின் படியே நாடகத்தை அரங்கேற்றினார்கள். ஆனால் நாடகத்தின் உச்சக்கட்டம் மட்டும் தடம் மாறிப்போய் விட்டது. முகமூடியணிந்த படி வீட்டிற்குள் புகுந்த இரண்டு மாணவர்களும் ஆசிரியரின் மனைவியை கயிற் றால் கட்டிப்போட்டார்கள். ஆனால் அவரோ அதில் இருந்து தப்பிப் போய் பொலிசாரை உதவிக்கு அழைத்துவிட்டார். பொலிசார் விரைந்து வந்துவிசாரணை நடத்தியபோது நாடகம் ஆடிய குட்டு அம்பலமானது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மென்கரைப்பொலிசார் பிடித்து விசாரித்து வருகின்றனர். இரண்டு மாணவர்களுக்கும் கூலியாக ரூபா 10 ஆயிரம் அவர் கொடுத்திருந்த தகவலும் வெளியானது.

# பலூஜாவில் சண்டை நிறுத்தத்திற்கு ஈ-ராக் இடைக்கால அரசு முடிவு

(டுபாய்)

ஈராக்கில் பலூஜா நகரில் தீவிர வாதிகளை ஒடுக்க அமெரிக்க இராணுவம் தீவிர தாக்குதல்களை நடத்தி வந்தது.இதில் ஏராளமான பேர் பலியானார்கள் இதற் கிடை யில் அங்கு சண்டை நிறுத்தம் செய்ய ஈராக் இடைக்கால அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தக வலை ஈராக் பாதுகாப்பு அமைச்சர் ஹசிம் -அல்-ஷாலான் தெரிவித்தார். ஈராக் இடைக்கால அரசுக்கும் ,பலூஜா நகரில் வசிக்கும் குடி மக்களுக்கு மிடையே இந்த ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த சண்டை நிறுத்தம் 3 நாட் களுக்கு அமுலில் இருக்கும். ஆனால் சண்டை நிறுத்தம் எந்தத் திகதியில் இருந்து அமுல் நடத்தப் படும் என்பது அறிவிக்கப் படவில்லை.

# இஸ்ரேல் இராணுவம் ரொக்கெட் தாக்குதல் பத்து நாட்களில் 85 பேர் உயிரிழப்பு

(காசா)

தெற்குக் காசாப்பகுதியில் இஸ்ரேல் இராணுவம் ரொக்கெட் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது. அகதிகள் முகாமில் குண்டு வீழ்ந்து வெடித்தது. இதில் பலஸ்தீன பொலிசார் 2பேர் பலியானார்கள். மற்றொரு இடத்தில் 2 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். கடந்த 10 நாட்களாக அந்தப் பகுதியில் நடக்கும் இத்தகைய தாக்குதலில் இதுவரை 85 பேர் பலியாகி இருக்கிறார்கள். இவர்களில் 47பேர் தீவிரவாதிகள் மேலும் 3இஸ்ரேலியர்களும் அடங்குவார்கள்.



ஜபாலியா அகதி முகாமிலிருந்து இறந்தவர் ஒருவரின் உடலை அகற்றும் பலஸ்தீனிய மருத்துவக் குழுவினரும், உறவினரும்.

# சிங்கப்பூரில் போதைப்பொருள் வேட்டை பொலிசாரிடம் 23 பேர் பிடிபட்டனர்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் நகரில் போதைப் பொருள் தடுப்புப் பொலிசார் தீவிர வேட்டை நடத்தினார்கள் ஆடம்பர விடுதி மற்றும் அடுக்கு மாடி வீடுகளில் இந்த சோதனை நடைபெற்றது. அப்போது 23 பேர் பிடிபட்டனர். இவர்களில் பலர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் இவர்களிடம் இருந்து ரூபா.6 இலட்சம் பெறுமதியான போதைப் பொருள் மற்றும் துப்பாக்கிகள் சிக்கின. இந்தக் குற்றச்சாட்டு நிரூ பிக்கப்பட்டால் பிடிபட்டவர்களுக்கு மரணதண்டனை கிடைக்கும்



இஸ்ரேலிய ஆகாய விமானத் தாக்குதலில் சிதைந்து போயுள்ள ஜபாலி அகதி முகாமில் பலஸ்தீன வாசிகள் திரண்டுள்ளனர்.

# நேபாளத்தில் நிலச்சரிவு இரு பேருந்துகள் மண்ணில் புதைந்தன

(காத்மண்டு)

நேபாள நாட்டில் பால்மா--புத் வால் தேசிய நெடுஞ்சாலையில் சித்தபாபா என்ற இடத்தில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. 50மீற்றர் நீளத்துக்கு மண் சரிந்து விழுந்து வீதியை மூடியது அந்தச் சமயத் தில் வீதியில் வந்த 2பயணிகள் பேருந்தில் சிக்கிக் கொண்டன. இரு பேருந்துகளையும் மண் மூடியது. இதில் பேருந்துக்குள் இருந்த 3 பயணிகள் மூச்சுத்திணறி இறந்தனர். பலர் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். இந்த இரு பேருந்துகளிலும் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்ற விவரம் தெரியவில்லை. இறந் தவர்களின் எண்ணிக்கை உயர லாம் என்று அஞ்சப்படுகிறது. பொலிசாரும், அதிகாரிகளும் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# சீன பொறியியலாளர்கள் இருவர் பாக்ஸ்தான் தீவ்ரவாதிகளால் கடத்தல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள நீர் மின்சார உற்பத்தி நிலையத்தில் சீனாவைச் சேர்ந்த பொறியிய லாளர்கள் பணியாற்றி வந்தனர். இந்த மின்சார நிலையம் ஆப் கானிஸ்தான் எல்லையோர மலைப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரண்டு சீனப் பொறியிய லாளர்களை ஒரு கும்பல் கடத்திச் சென்று விட்டது. சம்பவம் நடந்த இந்தப்பகுதி அல்-ஹைதா ஆதரவுத் தீவிரவாதிகள் நடமாட்டம் மிகுந்த இடமாகும். எனவே தீவிரவாதிகளே இந்தக் கடத்தல் சதியில் ஈடுபட்டிருக்கலாம் என்று சந்தேகிக் கப்படுகிறது. கடத்தப்பட்ட பொறியி யலாளர்கள் பெயர் விபரம் உடனடி யாகத் தெரியவில்லை.

கடத்தல் விவகாரத்தை பாகிஸ் தான் அதிகாரிகள் உறுதிசெய்தனர். இது பற்றி விசாரணை நடப்பதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரி வித்தனர்.



பாக்தாத்தின் அயல் நகரான சதார் சிற்றியில் வாகனம் ஒன்றில் இருந்து மற்றைய வாகனத்திற்கு உணவுப் பொருட்களை விநியோகிக்கும் அமெரிக்க இராணுவ மருத்துவர்கள் பிரச்சினைக்குரிய பகுதியில் மனிதாபிமான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.



பாகிஸ்தான் கள நடவடிக்கைக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நியாஸ் கற்றாக் (வலம்) தெற்கு வசிறிஸ்ரானில் ஊடகவியலாளர் ஒருவருடன், உரையாடுகிறார்.

# அழிக்கப்பட்ட பேர்லின் சுவர் 15 ஆண்டின் பின் மீண்டும் எழுகிறது

(பேர்லின்)

கிழக்கு ஜேர்மனி, மேற்குத் ஜேர்மனி ஆகியவற்றைப் பிரிக்க பேர்லின் நகரின் நடுவில் மிகப்பெரிய சுவர் எழுப்பப்பட்டு இருந்தது இருநாடுகளும் இணைந்ததைத் தொடர்ந்து பேர்லின் சுவர் இடித்துத் தள்ளப்பட்டது.சுமார் 15 ஆண்டுகளுக்குப்பின்னர் இந்தச் சுவரின் ஒரு பகுதியை மீண்டும் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வரும் பயணிகள் காணத்தக்க வகையில் சுமார் 200 மீற்றர் நீளத்துக்கு மட்டும் இந்தச் சுவர் அமைக்கப்படும். தனியார் அருங்காட்சியகம் ஒன்று இதனைக் கட்டுகிறது.

# வடக்கின் பனை அபிவிருத்தித் திட்டங்களை

# பனை அபிவிருத்திச் சபை முற்றாகப் புறக்கணிப்பு!

## –பனை வளத்தைப் பெருக்க த.பொ.மே.நி. முயற்சி

(அலுவலகசெய்தியாளர்)

**இவ்வாண்டுக்கான பனை அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வடக்கின் நான்கு மாவட்டங்களை பனை அபிவிருத்திச் சபை முற்றாகப் புறக்கணித்துள்ளது. இதனால் இவ்வாண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளன.**

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு வருடந்தோறும் பனை அபிவிருத்திச் சபையினால் பனை நடுகைத் திட்ட அபிவிருத்தி வேலைகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான வேலைகள் இதுவரை நடைபெற்று வந்தன.

இந்நிலையில் 2004 ஆம் ஆண்டுக்கான பனை நடுகை அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கான நிதியானது மேற்படி மாவட்டங்களுக்கு பனை அபிவிருத்திச் சபையினால் இன்று வரை ஒதுக்கப்படவில்லையெனத் தெரியவந்துள்ளது. மேலும் பனை நடுகை வேலைக்கான உகந்த காலம் இது வாகையால் இவ் வேலைத்திட்டம் மேற்கொள்ளப் படாததனையிட்டு இதனை நம்பி வாழும் மக்கள் மிகவும் விசனமடைந்திருப்பதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அத்துடன் கடந்த காலங்களில் நடைபெற்ற போர் நடவடிக்கை காரணமாக அழிவுற்ற பனை வளத்தை மீள நடுகை செய்து இவ் வளத்தை மேம்படுத்த வேண்டிய கடப்பாடு உள்ள பனை அபிவிருத்திச் சபையானது, பாரபட்சமான நிலையில் உள்ளதையிட்டு மக்கள் கவலையடைந்துள்ளனர். தமிழீழத்தின் கற்பக தரு என்று சொல்லப்படும் இப் பனைவளமானது அருகிவரும் அபாயநிலை காணப்படுகின்றது. ஆனால் இவ் வளத்தின் முக்கியத்துவத்தினை உணர்ந்து பனை வளத்தினைப் பாதுகாக்கும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மாவட்டங்கள் தோறும் பனை நடுகைத்திட்டத்தினை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருவதனைக் காணக்கூடியதாக வுள்ளது.


பனை அபிவிருத்திச் சபையின் தலைமைப் பதவியினை ஈ.பி.டி.பி கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தற்போது வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வெளி வாரப்பரீட்சைகள்

பேராதனைப் பல்கலைக்கழக முதற்கலைத்தேர்வு வெளிவாரிப் பரீட்சைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. பல்கலைக்கழக கல்வி சார். ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினால் இடை நிறுத்தப்பட்ட இம் முதற் கலைத் தேர்வுகள். மீண்டும் இம்மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகின்றன. (10)



திருமுறிகண்டி இந்து வித்தியாலய ஆசிரியர்கள் சர்வதேச ஆசிரியர் தினத்தன்று மாணவர்களாலும், பெற்றோராலும் திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்படுகின்றனர். (படம்: தங்கசாமி)



வவுனியா நேரியகுளம் பிரதேச வைத்தியசாலை மகப்பேற்று விடுதி திறப்பு விழா நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மங்கல விளங்கேற்றுவதனையும் மகப்பேற்று விடுதியினை வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை திறந்து வைப்பதனையும் படங்களில் காணலாம். (படம்:ஆறு.சுபாஸ்கரன் வவுனியா செய்தியாளர்)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாவட்ட ரீதியில் மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கை

## முதற்கட்டமாக திருமலையில் ஆரம்பம்

(திருமலை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவட்ட ரீதியான கொள்கை விழிப்புணர்வுப் பிரச்சார இயக்கம் எதிர்வரும் வாரம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

முதற்கட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் திருகோணமலை மாவட்டத்திற்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

ஒக்ரோபர் 16, 17, 18ஆம் திகதிகளில் திருகோணமலை மாவட்டத்தின் வடக்கு முதல் தெற்கு வரை மூன்று குழுக்களாகப் பிரிந்து விழிப்புணர்வு பிரச்சாரக் கூட்டத்தை நடத்துவர். மக்களை நேரில் சந்தித்து அவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதிலும் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஈடுபடுவர் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை நகரில் முதலாவது விழிப்புணர்வுக் கூட்டத்தை நடத்துவதுடன் இந்த இயக்கம் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (25)

# சிறார்களிடையே சேமிப்பை மேம்படுத்த தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முயற்சி

(மல்லாவி)

மல்லாவி சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியில் உண்டியல் மூலம் சேமிப்புச் செய்த சிறார்களுக்கு சேமிப்புப் பழக்கத்தை மே[illegible] விரிவாக்கும் நோக்குடன் சர்வதே[illegible] சிறுவர் தினத்தன்று தமிழர் புனர்வாழ்வுக் கழ கத்தால் 25 வீதமான பணப் பங்களிப்பு அவரவர் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டதுடன் அவ் வைப்பு செய்யப்பட்ட வைப்புறுதி சான்றும் வழங்கப்பட்டது.

அத்துடன் இச் சிறுவர் தினத்தன்று 30 பேருக்கு மேற்பட்ட சிறுவர்கள் எழில் சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்துள்ளார்கள். இவ் எழில் சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்தவர்களுக்கு உண்டியல் வழங்கப்பட்டுள்ளது.

இவ் ஒரு வருட காலப்பகுதியில் சிறுவர் உண்டியல் மூலம் ரூபா நான்கு இலட்சம் வங்கியில் சேமிக்கப்பட்டுள்ளதுடன் இவற்றிக்கு த.பு.கழகத்தால் 25 வீதமான பங்களிப்பாக ஒரு இலட்சம் ரூபா வைப்புச் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. 350 பேருக்கு வைப்புறுதி சான்றுகள் வழங்கப்பட்டன. (24)

# சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு பூநகரியில் இன்று விசேட சிகிச்சை

பூநகரி தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்துள்ள விசேட வைத்தியர் அவர்களால் இன்று திங்கட்கிழமை சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் பார்வையிடப்பட்டு அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட வுள்ளதோடு நீண்ட காலமாக நீரிழிவு (சலரோகம்) நோய் உள்ளவர்களுக்கும் விசேட பரிசோதனை செய்யப்பட்டு அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க வித்தியாலய புதியஇரண்டு மாடிக் கட்டடத் திறப்புவிழா நிகழ்விற்கு வருகை தந்த விருந்தினர்களையும்,இடம்பெற்ற நிகழ்வையும் படத்தில் காணலாம். (படம்:சங்கர்)

# தனிநபரின் பிரச்சினையை இனிமேல் பொதுப்பிரச்சினையாக எடுப்பதில்லை!

## மன்னார் நல்லிணக்கப் பேச்சில் இணக்கம்

(மன்னார்)

“அண்மையில் மன்னாரில் ஏற்பட்ட அசம்பாவிதத்தின் பின் மன்னார் நகரம் வழமைக்குத் திரும்பினாலும், பேசாலையிலுள்ள முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. எனினும் இது தொடர்பான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நிலைமை சுமுகமாகியுள்ளது.

பேசாலை மக்களின் கருத்தின் பிரகாரம் தனிப்பட்ட நபர் ஒருவரின் பிரச்சினையை பொதுப் பிரச்சினையாக எடுத்து சமூகங்களிடையே பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்பதாகும்.

இதன் நிமித்தம் வியாழனன்று மாலை 6.00 மணிக்கு மன்னாரிலிருந்து பிரதேசப் பொறுப்பாளர் முடியரசன் அவர்களின் தலைமையில் சமாதான நல்லிணக்கக் குழுவொன்று பேசாலைக்குச் சென்று பேசாலை புனித வெற்றி விநாயகர் ஆலயத்தின் முன்றலில் சர்வமத அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் பேசாலை பங்குத் தந்தையுமான அருட்திரு.வின்சன் பற்றிக் அவர்களின் தலைமையில் கூட்டமொன்று இடம் பெற்றது. இக் கூட்டத்தில் மன்னார் பிரதேச பொறுப்பாளர் முடியரசன், மன்னார் வர்த்தக சங்கத் தலைவர், பொது அமைப்புக்களின் தலைவர் உட்பட பல பிரமுகர்களும், கரிசலிலுள்ள முஸ்லிம் பிரதிநிதிகள், பள்ளி வாசல் தலைவர்கள், பேசாலை பொது மக்கள், பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்ட கூட்டத்தில் இணக்கப்பாடொன்று எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதில் இனிமேல் தனிப்பட்ட ஒரு நபரின் பிரச்சினையைப் பொதுப் பிரச்சினையாக எடுக்கக்கூடாதெனவும், இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாதெனவும் அவ்வாறு பிரச்சினைகள் எதுவும் நிகழும் பட்சத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வலியுறுத்தப்பட்டதுடன் இதற்குப் பொறுப்பாக இரு பகுதியினரையும் இணைத்து சமாதான நல்லிணக்கக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

இதன் பின்னர் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் திறப்பதற்கு இணக்கம் தெரிவித்ததையடுத்து பேசாலை முஸ்லிம் கடைகள் யாவும் அன்றைய தினம் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (மி)



# வரலாற்றுக் கண்காட்சி-05

இப்படிக் கூட்டம், அப்படிக் கூட்டம் என்று ஒன்றோடும் ஒப்பிடமுடியாத அளவுக்கு அந்தமாதிரிக் கூட்டம் நிறைந்து வழிந்தது. கிளி. மத்திய மைதானத்தில் ஒருவரின் முதுகோடு மற்றவர் ஒட்டியபடி (கொஞ்சம் விலகினால் இடையில் இன்னொருவர் வந்து புகுந்துவிடும் பாரிய ஆபத்து வந்துவிடும்) ஒரு மாபெரும் அட்டைபோல படைக்கலக் கண்காட்சிப் பந்தல் தொடங்கி, படைக்கல உற்பத்தித் தொழிலகம், படகுக் கட்டுமானத்துறை, படகுத்துறை, புகைப்படக் கண்காட்சி, இராணுவ மருத்துவமனை, பழையகாலக் களமாதிரி மருத்துவமனை, விடியல் படைவீடு, சூட்டுப்பயிற்சித்தளம் என எங்குமே தலைகள்,தலைகள், தலைகள் தான். அட! உச்சி மதியவெயில்கூட ஒருவருக்கும் சுடவில்லை யோ? பசிகூட எடுக்கவில்லையோ? எனுமளவுக்கு மைதானத்தில் மக்கள் எண்ணிக்கை குறையவேயில்லை.



முதுகோடு முதுகாக ஒட்டியபடி அங்குலம் அங்குலமாக நகர்ந்ததில் புகைப் படக் கண்காட்சியை ஆழமாகப் பார்க் கக்கூடியதாக இருந்தது. கடந்துபோன உலகமொன்று அங்கே கண்முன் விரிந்தது.

1984 ஆம் ஆண்டு மன்னார் சிங்களக் காவல்துறைப் பணிமனை மீதான தாக்குதலுக்கென சிறிலங்கா இராணுவத்தினரின் சீருடையில் தயாராகும் விடுதலைப் புலிகள், லெப்.கேணல் திலீபனின் உயிர் பிரியச் சில நாட்களின் முன் திலீபனுடன் தலைவர் அவர்கள், 1985இல் படைய தொடக்கப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் மகளிர் படையணியின் முதலாவது அணியினரின் பல்வேறு தோற்றங்கள், மாமனிதர் பேராசிரியர் துரைராஜா அவர்களும், தலைவர் அவர்களும் ஒருவரையொருவர் வணங்கிக்கொண்டிருக்கும் காணற்கரிய காட்சி, விடுதலைப்புலிகள் மகளிர் படையணிகளின் வெவ்வேறு சண்டை ஒத்திகை நிகழ்வுகளில் அவர்களோடு அருகிருக்கும் தலைவர்... என்று விரிகின்றது கடந்துபோன காலம்.

தலையோடு காலாக நனைந்தபடி திறந்த அகழியொன்றில் 50 கலிபர் துப்பாக்கியை இரு பெண்போராளிகள் பழுது பார்த்துக் கொண்டிருக்கும் காட்சி மனதை உலுக்குகின்றது. இப்படி எத்தனையோ இடர்களிடையே அவர்கள் போரிட்டதால்தான் இன்று எல்லாக் கதவுகளும் மக்களுக்காகத் திறந்துள்ளன.

முகம் கழுவவும் நேரமற்ற ஜெயசிக்குறு எதிர்நடவடிக்கைக் களமுனையில், பல் துலக்காமலேயே பல நாட்கள் சாப்பிட வேண்டியெல்லாம் நேரிட்டது எங்கள் போராளிகளுக்கு நீரற்ற, வரண்ட நாளொன்றில், இலைகளிலிருந்து வடிந்த நீரைச் சேமித்து பொலித்தீன் பையில் விட்டுக்குடிக்கும் பெண்புலி ஒருத்தி, நேரமேயற்ற நாட்களில் மிக அரிதாகக் கிடைத்த ஒரு ஓய்வுப்பொழுதில் காப்பரணின் மீது அமர்ந்து கலகலக்கும் பெண் போராளிகள் என உங்களைப் பல நாட்கள் உறங்கவிடாமல் செய்யப் போகின்ற காட்சிகளெல்லாம். பார்த்து விட்டீர்களா?

எதைப்பார்ப்பது? எதை விடுவது? அலைகளின் முகடுகளில் தாவித் திரியும் டோறாப் படகொன்று, எங்களை நனைக்காத கடலொன்றில் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறதே! அதைப்பார்க்கவா? ஜெயசிக்குறு படைகள் யாழ். வீதியால் நகரமுற்பட்டபோது தலைவர் அவர்கள் புளியங்குளச் சந்தியை மையப்படுத்தி அமைத்த பாரிய படைத்தளத்தை ஒத்ததாக 'விடியல் படைவீடு', எப்புறம் பகைவரினும் அப்புறம் தாக்கிப் பாய்ந்தழிக்கக் கூடிய பலமிக்க 'விடியல் படைவீடு' ராங்கிகள், பவள்கள், மோட்டார்கள் அதிசக்தி வாய்ந்த படைக்கலங்கள், அவற்றிலும் பலமிக்க மனஉறுதிகொண்ட போராளிகள்! எல்லாம் கொண்டதாய் அமைந்திருக்கின்றதே ஒரு படைத்தளம். அதைப்பார்க்கவா?

2ஆம் லெப். மாலதி தனது கடைசி மணித்துளியில் கோப்பாய் சமர்க்களத்திலிருந்து வெளியேற்றிய M16A1 மீசாலைக்களத்தில் தன்னைச் சுடும்படி தன்

## மலைமகள்

தோழனிடம் லெப்.சீலன் கொடுத்த L2A3 என்று பல வரலாற்றுப் பெருமைகளோடு விரிகின்றது படைக்கலக் கண்காட்சி.

சூட்டுப் பயிற்சி நடைபெறும் தளத்திற்குப் பக்கத்திலேயே போகமுடியாது. வேட்டொலிகள் ஓயவில்லை. ஒரு சண்டைக்களம்போல் தெரிகிறது அது.


பார்த்துவிட்டீர்களா? பயன் பெற்றீர்கள். பார்க்கவில்லையா? வாழ்வில் பாதியை இழந்தீர்கள்.



# 2 ஆம்.லெப் மாலதியின் 17ஆம் ஆண்டு நினைவில்...


### திருமலையில்...






படங்கள்:-குருநாதன்

### புதுக்குடியிருப்பில்..





படங்கள்:-தவரட்ணம்.

### வவுனியாவில்...





படங்கள்:-சிவா

# சிறிலங்கா அரசியலில் நிறைவேற்று அதிகாரம் படும்பாடு

1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐ.தே.கட்சி சிறிமா மீது அதிசயிக்கத்தக்க வகையில் அச்சம் கொண்டிருந்தது. தேர்தலில் சிறிமா படுதோல்வியடைந்தபோதிலும் அரசியல் ரீதியாக அவரை ஒழிப்பதற்கே ஐ.தே.கட்சி பார்த்திருந்தது. ஜே.ஆர். தான் ஏற்படுத்திய நிறைவேற்றதிகார சனாதிபதி பதவி அவருக்கு கிடைத்துவிடும் என்று அஞ்சினார். அதனாலேயே அவரது குடியியல் உரிமையும் பறிக்கப்பட்டது.

அதேபோன்றே இன்று சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசும் ரணில் நிறைவேற்று அதிகார சனாதிபதியாக வந்துவிடுவாரோ என அஞ்சுகிறது. அதனாலேயே அரசியல் யாப்பில் மாற்றம் கொண்டுவர வேண்டும் எனவும், சனாதிபதி முறையை நீக்க வேண்டும் எனவும் கருத்துக் கணிப்பு நடத்த வேண்டும். வாக்களிப்பில் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்த வேண்டும் எனவும் கொக்கரிக்கின்றது.

சிலவேளை, ரணில் சனாதிபதியானால் அவர் தொடர்ந்து 12 ஆண்டுகள் நீடிப்பார் என்பது தற்போதைய அரசுக்குத் தெரியும். நிறைவேற்றதிகார சனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை இரண்டு முறை பதவியிலிருக்க யாரும் தவறியதில்லை. அதுபோல, ரணில் சனாதிபதி பதவிக்கு வந்தால் நிச்சயம் 12 வருடங்கள் அதிகாரத்தில் இருப்பார். அவரின் பதவிக் காலம் முடிவுற்றதும் ஐ.தே. கட்சியைச் சேர்ந்த வேறு ஒருவர் அப்பதவிக்கு வந்துவிடுவார்.

ஜே.ஆர். அப்படியான விதிமுறை ஒன்றையே ஏற்படுத்தினார். ஜே.ஆர். இற்குப் பின் பிரேமதாச, அவருக்குப் பின் லலித், அதன் பின்னர் காமினி திசாநாயக்க, பின்னர் ரணில் விக்கிரமசிங்க, அவருக்குப் பின் வேறு ஒருவர் என இருந்திருக்கலாம்.

பின்னர் சந்திரிகா பதவியில் அமர்ந்தார். எனினும் அவர் ஐ.தே.கட்சிக்கு அஞ்சத் தேவையிருக்கவில்லை. காரணம் (சந்திரிகாவின் பின்னர் அவரது கட்சியைச் சேர்ந்த ஒருவர் அப்பதவிக்கு வருவார் என எண்ணுவதும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோர் கட்சியில் (சிறில. சு.க.) இருப்பதுமாகும். அதற்கு தலைமை ஏற்கவிருப்பதும் பண்டாரநாயக்க ஒருவரே. அதற்கு தலைவரை நியமிப்பதை தீர்மானிப்பவரும் அவரே. அதனால், அக்கட்சியில் வேறு ஒருவருக்கு தலைவர் ஒருவரை நியமிக்கும் அதிகாரமும் கிடையாது. அந்த வகையில் ஜே. ஆர். வகுத்த விதிமுறை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் செல்லுபடியாகாது. இதன் காரணமாகவே சந்திரிகாவிற்குப் பின்னர் தனக்கு சனாதிபதி பதவி கிடைக்கும் என ஐ.தே.கட்சி கருதுகிறது. ஆயினும், அந்த சனாதிபதி முறை நீக்கப்பட்டு விடுமோ என்ற அச்சமே ஐ.தே.கட்சிக்குள் தோன்றியிருக்கின்றது.

ரணில் சனாதிபதியாக வந்துவிட்டால் ஐ.தே.கட்சியினரே தொடர்ந்தும் பதவி வகிப்பர் என்பது சந்திரிகாவின் அச்சமாகும். தீர்க்க வேண்டிய எத்தனையோ பிரச்சினைகள் நாட்டில் இருக்கும்போது வாக்களிப்புக்கு தேசிய அடையாள அட்டையின் முக்கியத்துவத்திற்கு சந்திரிகா முன்னுரிமையளிப்பது அதற்காகவே. இதனால், சிறுபான்மையினரின் வாக்குகளைப் பயனற்றதாக்க முடியும் என அவர் கருதுகிறார்.

நிறைவேற்றதிகார சனாதிபதி பதவியைப் பெற சிங்களவர்களின் வாக்குகளால் மட்டும் முடியாது. அதற்காக தோட்டப்புற தமிழர்களைப் போல் வட-கிழக்கு வாழ் தமிழர்களின் வாக்குகளையும் சந்திரிகா பெற வேண்டும். 1994ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் அவர் வென்று பதவிக்கு வந்தது தொண்டமானினதும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களினதும் நல்லெண்ணத்திலாகும். 1999ஆம் ஆண்டு தொண்டமானின் ஆதரவும் வடக்கு-கிழக் கில் ஏனைய தீவிரவாத கட்சிகளின் ஆதரவும் கிடைத்தே அவர் பதவிக்கு வந்தார். அத்துடன் முஸலிம்களின் ஆதரவும் கிடைத்தது.

இன்று வடக்கு-கிழக்குப் பகுதி மக்களின் ஆதரவு அவருக்குக் கிடையாது. முஸ்லிம் கட்சியும் சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. தொண்டமானின் ஆதரவும் நிச்சயமற்றதாக விருக்கின்றது. இந்நிலையில் அவர் சனாதிபதித் தேர்தல் நடத்தினாலும் கருத்துக் கணிப்பு நடத்தினாலும் அவருக்குத் தோல்வியே ஏற்படும். அதற்கு காரணம் நிறைவேற்றதிகார முறையை நீக்கிவிட அவர் எதிர்ப்புக் காட்டுவதாகும்.

ஆகவே இனிவரும் சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறவோ அதனை நீக்கிவிட ஆதரவு திரட்டவோ சிறுபான்மை (கட்சிகளின்) மக்களின் வாக்குகளை செல்லுபடி அற்றதாக்க வேண்டுமென சந்திரிகா கருதுகிறார்.


ரணிலை சனாதிபதிப் பதவியில் அமர்த்தக் கூடாது என சந்திரிகா கூட்டணி நினைத்தது இன்று நேற்றல்ல. 1977இல் சிறிமாவை ஐ.தே.கட்சி நினைத்ததும் அவ்வாறே. சிறிமா 17வருடம் எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தார். ரணில் 10 வருடங்களாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கிறார். தேர்தலில் எவ்வாறான தோல்வியைச் சந்தித்திருந்தாலும் சிறில சுதந்திரக்கட்சிக்கு சிறிமா முக்கியமானார். அதுபோல ஐ.தே. கட்சிக்கு ரணில் முக்கியமாகிறார். அதற்குக் காரணம் சந்திரிகாவின் கூட்டணியின் நடவடிக்கைகளாகும். ஐ.தே.கட்சித் தலைவராக ரணில் இருக்கக் கூடாது என கட்சியினர் நினைப்பதாக சந்திரிகா கட்சிதப்பபிப்பிராயம். கொண்டது. கட்சித் தலைமையை மாற்றக் கோரி கட்சியினரை சந்திரிகா கோருவதும் ரணில் மீது கொண்ட அச்சத்தினாலுமாகும். இதை ஐ.தே கட்சியும் அறியும்.

அன்று சிறிமா "எதிரி உன்னைத் தாக்க வருவது பலமிருந்தாலே, உன்னை விமர்சிப்பது பலமற்றிருந் தால் மட்டுமே" என்று கூறினார். இது ரணிலுக்கும் பொருந்தும். காரணம் ரணில் பொதுத் தேர்தலிலும் மாகாண சபைத் தேர்தலும்தோல்வியடைந்திருப்பதாகும்.

இந்தியாவில் சோனியாகாந்தியை வெளிநாட்டவர் என்றும். அந்நிய மதத்தவர் என்றும் மக்கள் புறம்தள்ளி வைத்தனர். அதனால் வாஜ்பாய் அரசை ஆட்டிவைக்கவும் முடியாது என்றும் சிலர் எண்ணின ர். சோனியாகாந்தி பல தேர்தல்களில் தோல்வி கண்டாலும் இறுதியில் வெற்றிபெற்றார்.

அரசியல் என்பது அதனையே-அமெரிக்காவின் நீகனுக்கும் இதே நிலை ஏற்பட்டது. காரணம் அவரது நடவடிக்கைகளில் மக்கள் அடைந்த வெறுப்பாகும். எனினும் அவர் மக்கள் மனங்களை வென்றதுடன் பிராந்திய அரசியலில் வெற்றி பெற்றார். அத்துடன் இரண்டு முறை அமெரிக்க சனாதிபதி ஆனார். ரணிலும் தொடர்ந்து 10 வருடங்களாக தோல்விகளைச் சந்தித்தார்.


சந்திரிகா


ஜே.ஆர்


ரணில்

1994இல் இருந்து இன்று வரை அவர் ஒருதேர்தலில் மட்டுமே ( 2001) வெற்றி பெற்றார். எனினும் அந்த அரசும் வீழ்ச்சியுறக் காரணமாக இருந்தது நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையே.

தேசப்பிரேமி இயக்கம் தாங்களே கூட்டணி அரசை உருவாக்கினோம் எனக் கூக்குரலிடுகிறது. அது அமைந்ததும் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையாலாகும்.சந்திரிகா நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தியே மூன்று அமைச்சுக்களை சுவீகரித்தார். ரணிலின் அரசாங்கத்தைக் கலைத்தார்.

ஆகவே இந்த அதிகாரம் ரணிலின் கைக்கு மாறினால் என்னவாகும்? அதை நினைத்தே சந்திரிகா கூட்டணி அஞ்சுகிறது. ரணிலின் குடியுரிமையைப் பறிக்க முடியாததால் சனாதிபதி முறை யை ஒழிக்க அவர் கனவு காண் கிறார். அதற்கான ஒரு உபாயமே வாக்களித்தலில் அடையாள அட்டை அவசியம் என்ற நாடகம். இதற்கு முக்கிய காரணம் நிறை வேற்று அதிகாரம் கொண்ட பதவியில் தொடர்ந்து சந்திரிகா நிலைத்திருப்பதற்கு எண்ணுவதே. பல கருத்துக் கணிப்புக்களால் தேர்தலில் உரிமை இழந்த ஐ.தே. கட்சியினரின் வாக்கு களை மடக்க அரசு எடுக்கும் முயற்சி அதற்கே உலை வைக்குமா என்பதே இன்று வினாவாக இருக்கின்றது.

உப்புள் ஜோசப் ப்ணாந்து (லங்காதீப)
தமிழில் வடிவேல்

## கால்வாய் நோய் - விழிப்பாக இருக்க வேண்டுகை

(புதுக்குடியிருப்பு)

முல்லை மாவட்டத்தில் வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால், பொக்கணை ஆகிய பிரதேசங்களில் கால்வாய் நோய் காரணமாக கால்நடைகள் இறந்து கிடப்பதையும், இறக்கும் நிலையிலிருப்பதையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், முல்லைத்தீவு அரச கால்நடை வைத்தியரும் நேரடியாக அவதானித்த வகையில் மேற்படி பிரதேசங்களிலிருந்து இறைச்சிக்காக கால்நடைகளைக் கொள்வனவு செய்வதும், இடத்துக்கிடம் மாற்றுவதும் தடை செய்யப்பட்டுள்ளதாக பொருண்மிய செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாட்டிறைச்சி நுகர்வோரும், ஏனைய பிரதேச கால்நடை வளர்ப்போரும் இது விடயத்தில் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (08)

## நாய்களால் பெரும் தொல்லை

வவுனியா நகரிலும், நகரைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. வீதிகளிலும், பொது இடங்களிலும் உள்ள நாய்கள் பொது மக்களின் போக்குவரத்திற்கு பெரும் இடையூறாக இருப்பதுடன், வீதியால் செல்பவர்களை கடிக்கவும் முற்படுகின்றன. இதனால் வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன. (10)



கால்வாய் நோயினால் பீடிக்கப்பட்ட மாடும், அதன் கன்றையும் ஒரு படத்திலும், .இந்நோயினால் இறந்து கிடக்கும் மாட்டை மற்றைய படத்திலும் காணலாம். (படம் - தவரட்ணம்)

## கால்நடை சிறுசிகிச்சை நிலையம் விசுவமடுவில் திறந்து வைப்பு

### தீவன விற்பனையும் இடம்பெறும்

(அலுவலக செய்தியாளர்)

விசுவமடுவில் கால்நடை சிறு சிகிச்சை, தீவன விற்பனை நிலைய திறப்பு விழா தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளர் உதயகுமார் தலைமையில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் காசிநாதன்,முன்னோடி கால்நடைப் பண்ணையாளர் இளங்கோவன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை விசுவமடுப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திலகன் ஏற்றி வைத்தார்.

பன்னிரு வேங்கைகளின் திருவுருவப் படத்திற்கு வீரவேங்கை சிலம்பரிதியின் தாயார் திருமதி இராசலட்சுமி, எல்லைப்படை மாவீரர் ஜெயாவின் துணைவியான திருமதி நிலா ஆகியோர் ஏற்றிவைக்க, மலர்மாலைகள் திருமதி காசிநாதன், திருமதி சகுந்தலா ஆகியோரால் சூட்டப்பட்டது.

நிலையத்தின் பெயர்ப்பலகையினை முத்து ஐயன் கட்டுப்பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் சண்முகராசா திரைநீக்கம் செய்து வைக்க, விசுவமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் சச்சிதானந்தம் நாடாவினை வெட்டி நிலையத்தினைத் திறந்து வைத்தார். பாடவிதமான உத்தியோகத்தர் ஜெயராசா, த.பொ.மே. நிறுவனத்தின் முல்லை. மாவட்ட பொறுப்பாளர் பூங்குன்றன், காராளி சினைப்படுத்தல் சேவை முகாமையாளர் மகாதேவன், துணுக்காய் பிரதேச கால்நடை வைத்தியர் செல்வி கிரிஜகலா, கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் சூரியகுமார், பண்ணையாளர் இளங்கோவன் ஆகியோர் ஆற்றிய உரையினைத் தொடர்ந்து மாவட்டச் செயலர் அமிர்தலிங்கத்தின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. (சோ)

## கடந்த வாரத்தில்

**30.09.2004-06.10.2004**

### 30

★ஈராக்கின் சமாரா நகரில் அமெரிக்கப்படையினருக்கும் ,கிளர்ச்சி வாதிகளுக்குமிடையே இடம் பெற்ற மோதலில் 100பேர் பலி; பலர்காயம் .



விமானத் தாக்குதலின் கோரம்

★அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் உம் எதிர்க்கட்சி வேட்பாள ரான ஜோன் ஹெரியும் முதற் தடவையாக ஒரே மேடையில் வாதிட்டனர்.



நேரடி விவாதம்

★வடஜப்பானில் மியாரி என்னும் சூறாவளியும், கடும் மழையும் பாரிய அனர்த்தங்களை விளைவித்ததன் காரணமாக 14 பேர் பரிதாபமாக பலியான துடன் 13 பேர் காணாமல் போயுள்ளனர்.

★பாக்தாத்தில் அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணி அருகே ஈராக்கிய கொரில்லாக்கள் நடத்திய 3 கார்க்குண்டுத் தாக்குதலில் 34 சிறுவர் உட்பட 41 பேர் பலி இச்சம்பவம் நீர்ப்பம்ப் செய்யும் நிலையமொன்றை திறக்கும் வைபவத்தில் இடம் பெற்றது.


★ காஷ்மீரின் அனைத்துக்கட்சி சூரியத் மாநாட்டின் மிதவாதப் பிரிவின் உறுப்பின ரான இனற்முகமட் ராபிக் சாகீன் இனந் தெரியா தோரால் படுகொலை.

★ .இஸ்ரேலிய எல்லை நகரான செட்ரெட்டின் மீது பலஸ்தீனப் போராளிகள் நடத்திய ராக்கெட் தாக்குதலில் 28 பேர் பலி.

### 01

★ஈராக் போருக்கு எதிர்ப்புத் தெரி வித்து அமெரிக்க சனாதிபதியின் வெள்ளைமாளிகையின் முன் சவப் பெட்டி களை வைத்து அமெரிக்கர் ஆர்ப்பாட்டம்.

★பாகிஸ்தானின் கிழக்குப் பகுதி யிலுள்ள சியால் கோட் நகரில் அமைந் துள்ள மிஸ்ரி அப்துல்லா இமாம் பர்காத்



பலியானோர் இறுதிச் [illegible]

பெயரிலான ஷியா முஸ்லீம்களுக்கு சொந்தமான மசூதி மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 20பேர் பலி; 40பேர் காயம்.

★சீனாவின் தேசியதினத்தில் இடம் பெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள் வதற்காக பயணிகள் பஸ் ஒன்று சென்ற வேளை அன்கூய் மாநிலத்தில் வைத்து பஸ் லொறியுடன் மோதியதில் 24 பயணிகள் பலி.

### 02

★மெல் போன் நகரில் தியாக தீபகலை மாலை நிகழ்ச்சி தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வினரால் நடாத்தப்பட்டது



தீபகலை மாலை

★ நேபாளத்தில் அரசு இராணு வத்தினருக்கும் மாவோவாதக் கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோத லில் கிளர்ச்சியாளர்கள் பலி.

★இந்தியாவின் நாகலாந்து, அசாம் மாநிலங்களில் தீவிரவாதிகளால் மேற் கொள்ளப்பட்ட பல்வேறு தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் பாடசாலைச் சிறுவர்கள், பெண்கள் உட்பட64 பேர் பலியானதுடன் 128 பேர் காயம்



குண்டுத் தாக்குதல்

★ பாகிஸ்தானின் அதிகாரம் மிக்க துறையான இன்ரசேவிசஸ் புலனாய்வு அமைப்பின் புதிய தலைவராக லெ.ஜென ரல் ஆஷ்:. பாக்பே வேஸ்கியானி நியமனம்.

★ ஈராக் போருக்கு எதிர்ப்புத் தெரி வித்து அமெரிக்க சனாதிபதி புஷ்ஷின் வெள்ளை மாளிகைக்கு முன்பு அமெ ரிக்கர்கள் சவப்பெட்டிகளுடன் ஆர்ப் பாட்டம்.

### 03.

★ அமெரிக்க ஆளில்லா உளவு விமானமொன்று திடீரென ஏற்பட்ட கோளாறினால் பாகிஸ்தானில் விழுந்து நொருங்கியது.

★ கிழக்கு-மேற்கு ஜேர்மனி இணைக்கப்பட்டதன் 14 ஆண்டுகள் பூர்த்தி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டா டப்பட்டது.

★தாய்லாந்தின் ஆயுதயா நகரில் பட்டாசு தொழிற்சாலையில் திடீரென ஏற்பட்ட வெடிவிபத்தில் 16 பேர் உடல் கருகிப் பலி.

★ஐ.நா அணு அவதானிப்புப் பிரிவின் தலைமை அதிகாரி மொஹ்மத் எல் பாரடி தென்கொரியத் தலைநகர் சியோலுக்குச் சென்று அணுத்திட்டம் தொடர்பாக தென்கொரிய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

### 04

★ ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு அருகில் கிறீன் சூன் சாலையிலும் அமெரிக்கத் தூதுவர் ஆலயத்திற்கருகிலும் அடுத்தடுத்து 2 குண்டுகள் வெடித்ததில் 10 பேர் பலி; 76 பேர் காயம்.

★அசாம் மாநிலத்தில் தொழிலதிபர் ஒருவரின் வீட்டினுள் புகுந்து பொடோ தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் பலி; 8 பேர் காயம்.

★அமெரிக்காவைச் சேர்ந்த ரிச்சட் அக்ஸெல், மற்றும் லிண்டா பக்க ஆகிய இருவரும் மருத்துவத்திற்கான நோபல் பரிசைப் பெற்றனர்.

### 05

★சூடானின் அல் ஒபிட் விமான நிலையத்திலிருந்து கியூபா நோக்கிப் புறப்பட்ட சரக்கு விமானமொன்று விபத்துக் குள்ளானதால் 4 ரஷ்ய விமானிகள் பலி;.

★கென்யாவின் தலைநகரான நைரோபியின் வடகிழக்கில் 60 மைல் தொலைவில் அமைந்துள்ள மசாகோஸ் மாவட்டத்திலுள்ள யாட்டா எனுமிடத்தில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 14 பேர் பலி; 30 பேர் காயம்.

### 06

★ சூடானில் டார்பூர் பிரச்சினை தொடர்பாக ஆராயவென பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் சூடானுக்கு விஜயம்.

★ பலஸ்தீனக் குடியிருப்புக்களில் இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் 3 பேர் பலி; 10 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் காயம.



உறவுகளை இழந்த சோகத்தில்

## மறவன்புலவு சகலகலாவல்லி பாடசாலை இராணுவமுகாமை அகற்ற நிர்ப்பந்தம்

(தென்மராட்சி)

சிறிலங்காப் படைகளின் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்கி இருக்கும் மறவன் புலவு சகலகலாவல்லி பாடசாலையை மீள் இயக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து இப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பின ரிடம் முறைப்பாடு செய்திருப் பதாகத் தெரியவருகிறது.

நீண்ட நெடுங்காலமாக தங்க ளின் சுயமான இருப்பிற்கும் உரிமைக்கும் போராடி வரும் இப் பகுதி மக்கள் சிறிலங்கா ஆக்கி ரமிப்புப் படைகளின் ஆக்கிர மிப்பால் வீடு வாசல்களை இழந் தும், ஆலய வழிபாட்டுக்கும், விவ சாய, மீன்பிடி நடவடிக்கைகளை யும் மேற்கொள்வதில் பாரிய இடையூறுகளையும் ஏற்படுத்தி யுள்ள படையினர், கல்விச் சாலையை படை முகாமாய் பாவிப்பதுடன்,

மாணவர்களின் எதிர்கால வாழ்வை பாழடிப்பதாகவும் தெரி விக்கப்படுகிறது. இது குறித்து ஏற்கனவே பல முறைப்பாடுகளை பரந்த அளவில் செய்திருந்தும் இதுவரை இப்பாடசாலை திறப்ப தற்கான விமோசனம் பிறக்க வில்லை என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## சாதாரணதர மாணவர்களுக்கு யுனிசெப் வழிகாட்டல் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் கல்வி பயிலும் கல்விப் பொதுத் தராதர சாதாரணதர வகுப்பு மாணவர் களின் கல்வி முன்னேற்றத்திற் கான வழிகாட்டல்களை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தென்மராட்சிப் பிரதேச மாண வர்களின் கல்வித்தர மேம்பாட்டி னைக் கவனத்தில் கொண்டே இவ்வாறான வழிகாட்டல் வகுப் புகளை நடத்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

அந்த அடிப்படையில் எதிர் வரும் 16ஆம் திகதி பாடசாலை மட்டத்திலான கணித, தமிழ், ஆங்கில பாட வழிகாட்டல் வகுப் புகளை ஐக்கியநாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஏற்பாடு செய்துள்ளது. (33)

## தொழில் துறை மேம்பாட்டிற்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் பிரதேச சுய தொழில் முயற்சியாளர்களின் தொழில்துறை மேம்பாட்டிற்கான உதவிகளை வழங்க 'மூவி மென்டோ' என்ற சர்வதேச தொண்டர் நிறுவனம் முன்வந் துள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் இடப் பெயர்வுகளால் பாதிக்கப்பட் டுள்ள மேற்படி பிரதேச சுய தொழில் முயற்சியாளர்களது பொருளாதார மேம்பாட்டினை கவனத்திற் கொண்டே இவ் உதவியை வழங்க மூவி மென்டோ முன்வந்துள்ளது.

அந்த அடிப்படையில் வலி காமம் சங்கானையில் உள்ள சுயதொழில் முயற்சியாளர் களுக்கு தொழில் உபகரணங் கள், ஊக்குவிப்பு கடனுதவி என பன வழங்கப்பட்டுள்ளன. (33)

## தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகளை தீவகத்தில் முன்னெடுக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகப்பிரதேசத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை மிகவும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிப்பதற்கு ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடக செயலாளர் ப.கனகலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் சாட்டி மாவீரர் துயிலும் இல்ல மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் தீவகக் கோட்ட அரசியல் துறை சிறப்பு பொறுப்பாளர் கண்ணன், புங்குடுதீவு அரசியல் துறை பொறுப்பாளர் இசைச் செல்வன், வேலணைப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் யாழ்நம்பி ஆகியோர் உட்பட தேசிய எழுச்சிப் பேரவை பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (33)

## மீன்பிடி இறங்கு துறைகள் ஆழமாக்கும் பணி ஆரம்பம்

(வடமராட்சி)

நீண்ட இடைவெளியின் பின் னர் வடமராட்சியின் வல்வெட்டித் துறைப் பகுதியிலுள்ள மீன்பிடி இறங்கு துறைகளை ஆழமாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த் தங்களினால் தோண்டப்படா திருந்த இறங்கு துறைகளை ஆழப்படுத்த நிகொட் அமைப்பு நிதி உதவிகளை வழங்கியி ருந்தது.

எனினும் கரையோரப் பாது காப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் இறங்கு துறைகளை ஆழப்படுத் தும் பணிக்கான அனுமதியை வழங்க மறுத்து வந்திருந்தனர்.

இதனையடுத்து நிலவி வந்த நீண்ட இழுபறிகளின் மத்தியில் தற்போது இறங்கு துறைகளை ஆழமாக்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. கனரக வாகனங்க ளுடன் மீனவர்களும் இணைந்து இப் பணி களை முன்னெடுத்து வருகின்றனர். (27)

## கலந்துரையாடல்

யாழ்.வடமராட்சிப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலை யங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று வடம ராட்சிப் பிரதேச செயலகமா நாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி பிற்பகல் 3மணி யளவில் இடம்பெறவுள்ளது. இதற்குச் சம்பந்தப்பட்ட அனை வரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது. (33)

# அரசின் திட்டங்கள் குறித்து கருத்துக் கூற

# அமைச்சர்களுக்கு சனாதிபதி அனுமதி மறுப்பு

## எரிபொருள் கொடுப்பனவிலும் பாரிய வெட்டு

**சமாதானம் குறித்தோ மற்றும் அரசின் ஏனைய திட்டங்கள் குறித்தோ வாய் திறக்கக் கூடாதென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அமைச்சர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். அத்துடன் அமைச்சர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவிலும் பாரிய வெட்டை ஏற்படுத்தியுள்ளார்.**

அமைச்சரவை உறுப்பினர்களுக்கு எரிபொருட்களுக்கான கொடுப்பனவை 90 ஆயிரத்தில் இருந்து 56 ஆயிரமாக குறைக்க வேண்டும் என சிறிலங்கா சனாதிபதி பணித்துள்ளார். கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அறிவுறுத்தலை அவர் விடுத்தார். அமைச்சர்களில் பெரும்பாலானோர் எரிபொருட்களுக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்கின்ற போதும் உரிய பணிகளைச் செய்வதில்லை என குற்றம் சுமத்தியே சனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்தார் ஏற்கனவே எரிபொருட்களுக்கான கொடுப்பனவை 76 ஆயிரமாக குறைக்குமாறு சனாதிபதி விடுத்த பணிப்புரை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப் படாமையை அடுத்தே இந்த புதிய பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெளிநாடு செல்வாரானால் அவர் தாம் செல்லும் விடயத்தை முடித்துக்கொண்டு உடனடியாக நாடு திரும்ப வேண்டும்

அதனை விடுத்து இலங்கையின் சமாதானம் தொடர்பாகவோ அல்லது ஏனைய விடயங்கள் தொடர்பாகவோ கருத்துக் கூறுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற உத்தரவையும் சனாதிபதி விடுத்துள்ளார். அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்களை கருத்திற்கொண்டே இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. (32)

## ரூ. 34.64 கோடி தேவை

அடையாள அட்டைகள் இல்லாத 28 இலட்சம் மக்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதற்கு முப்பத்திநான்கு கோடி அறுபத்தி நான்கு லட்சம் ரூபாய் தேவைப்படுகின்றது என சிறிலங்காவில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்ரட்ண சிறி விக்கிரமநாயக்கதெரிவித்துள்ளார்.

## கதிர்காமருடன் சந்திப்பு

சிறிலங்கா வந்துள்ள சுவிற்சர்லாந்து நாட்டின் வெளி விவகார அமைச்சர் நேற்று முன்தினம் மாலை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்துப் பேசியுள்ளார். இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக, பொருளாதார மற்றும் முதலீட்டுப் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. 4 நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சர், சிறிலங்காவின் முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும், இன்று சனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க அரசுடன் ஐ.தே.க. கைகோர்க்க வலியுறுத்து!

## ரணில், சந்திரிகா இந்தியாவிற்கு அழைப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியையும் இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வர இந்தியா பெரும் முயற்சி எடுப்பதாக லங்கா தீப சிங்கள வார மலர் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் ஒரு நடவடிக்கையாக சந்திரிகாவையும், ரணில் விக்கிரமசிங்கவையும் தனித்தனியாக அழைத்துப் பேச்சு நடத்த இந்திய அரசு திட்டமிட்டுள்ளதாகவும், அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பயணம் செய்யவிருந்ததாகவும் சனாதிபதி சந்திரிகா அடுத்த மாதம் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பதாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

ரணிலுடன் மிலிந்த மொறகொடவும் இணைந்து கொள்கின்றார். இவ்விஜயத்தின்போது ரணில் விக்கிரமசிங்க இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன்சிங், சோனியாகாந்தி, வெளிநாட்டமைச்சர் நட்வர்சிங் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரையும் சந்தித்துப் பேசுவார்.

இதன் போது இந்தியாவுக்கு வருகை தரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனையும் அவர் சந்தித்துப் பேசுவார். இதனையடுத்து அடுத்த மாதம் சந்திரிகாவும் இந்தியாவிற்கு விஜயம் செய்து மேற்படி அரசியல்வாதிகளை சந்திக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## முன்னாள் பொலிஸ் மா அதிபரின் சிபார்சுகள் இரத்து

(கொழும்பு)

சிறிலங்கா முன்னாள் பொலிஸ்மாஅதிபர் இந்திராடி சில்வாவினால் சிபார்சு செய்யப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்களை இரத்துச் செய்திருப்பதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

புதிய பொலிஸ்மா அதிபர் சிபார்சுகளை இதற்கென பெற்றுக்கொள்ள உத்தேசித்திருப்பதாக இந்தக் குழுவின் தலைவர் ரஞ்சித் அபேயசூரிய தெரிவித்திருக்கிறார். இது தொடர்பாக புதிய பொலிஸ் மா அதிபர் சந்திரா பெனாண்டோவுடன் கலந்துரையாடியிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். இதேவேளை, தற்போது வெற்றிடமாக இருக்கின்ற சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர், பிரதிப்பொலிஸ் மா அதிபர் பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமிப்பது தொடர்பாக பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.


## பணிநிலை வேண்டுகை

வருவாய்ப்பகுதி ஆளுகையின் கீழுள்ள கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, விசுவமடு ஆகிய சந்தைகளில் வரி அறவீட்டாளருக்கான பணிநிலை வெற்றிடமுள்ளது. இவ் வெற்றிடங்களை நிறைவு செய்ய ஆண்களிடமிருந்து கீழ்வருந்தகைமைகளுக்கமைய வேண்டுகைகள் கோரப்படுகின்றன. இப் பணிக்கு விருப்பமுடையோர் தன் வரலாறடங்கிய வேண்டு கையை 2004.10.15ஆம் நாளுக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**தகைமைகள்**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும். அல்லது ஆண்டு 11இல் கல்விகற்றிருப்பதுடன் யாதேனுமொரு நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய பட்டறிவு இருத்தல் வேண்டும்.
02. அகவை :- 18-35 வரை

*நேர்முகத் தேர்வு நடைபெறும்,*
நாள்:- 2004.10.20
நேரம்:- காலை 10.00
இடம் :- வருவாய்ப்பகுதிச் செயலகம், யாழ்சாலை, கிளிநொச்சி.

*வேண்டுகைஅனுப்பவேண்டிய முகவரி*
அலுவலர்,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப்பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

01. நேர்முகத் தேர்விற்குக் கடிதம் அனுப்பப் படமாட்டாது.
02. நேர்முகத் தேர்விற்கு வருகை தரும் போது கல்விச்சான்று, அடையாளஅட்டை, பிறப்புச் சான்று, குடும்பப்பதிவு அட்டை என்பன கொண்டு வருதல் வேண்டும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பிரிவு,
வருவாய்ப்பகுதி,
நிதித்துறை.

(சி-10263)


# சனாதிபதியின் 10-வது வருட கொண்டாட்டம் உடனடியாக நிறுத்த சந்திரிகா பணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி முதல் டிசம்பர் 12 வரை நடாத்தப் படவிருந்த சந்திரிகா சனாதிபதியாகப் பதவியேற்ற 10ஆம் வருடக் கொண்டாட்ட நிகழ்வுகளை உடனடியாக நிறுத்துமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளருக்கு சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்,மேற்படி கொண்டாடப்படவுள்ள நிகழ்வுகள் சந்திரிகாவின் அனுமதியின்றி திட்டமிடப்பட்டுள்ளதே காரணமாகும் இவ்விடயம் பற்றி ஆராயவென மாவட்ட கட்சிச் செயலர்களின் சந்திப்பொன்று கடந்த8ஆம் நாளன்று சனாதிபதி செயலகத்தில் நடைபெற்றுள்ளது இந்நிகழ்வுக்கான குழுவின் தலைவராக மங்கள சமரவீர நியமிக்கப்பட்டிருந்தாராயினும் இதனை ஆட்சேபித்து கட்சி செயலர் மைத்திரிபால சிறிசேனவும் மற்றும் உறுப்பினர்கள் சிலரும் சந்திரிகாவிடம் கேள்வி எழுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## சட்டவிரோத சி.டி தயாரிப்பு தொழிற்சாலை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

அத்துருகிரிய பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் சி.டிக்களை தயாரித்த தொழிற்சாலையொன்றினை சிறிலங்கா பொலிசார் நேற்று முன்தினம் முற்றுகையிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இடத்தில் இருந்து வெளிநாட்டவர் உட்பட 5 பேரினை கைது செய்ததாகப் பொலிசார் தெரிவித்தனர். இலங்கையில்விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த பிரதியாக்கல் மற்றும் புதிய சி.டிக்களை உற்பத்திசெய்தல்போன்ற நடவடிக்கைகள் இங்கு இடம் பெற்று வந்ததாகவும் இந்தத் தொழிற சாலையினை மலேசிய நாட்டவர் ஒருவர் நடத்திவந்ததாக இந்த முற்றுகையை மேற்கொண்ட நுகேகொட விசேட குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட தொழிற் சாலையிலிருந்த ஒரு தொகை சி.டிக்களையும் அவற்றை தயாரிப்பதற்காக பயன்படுத்திய இயந்திரங்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

## ஹெல உறுமய செயலாளர் பதவி சம்பிக்க ரணவக்கவிடம் பறிப்பு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் செயலர் நிலையில் இருந்து பாட்டலி சம்பிக்க ரணவக்க விலக்கப்பட்டுள்ளார். இவருக்குப் பதிலாக கொட்டபோல அமரகீர்த்தி தேரர் கட்சியின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஜாதிக ஹெல உறுமயவுக்குள் முரண்பாடு காரணமாக கடந்த வெள்ளியன்று கொலன்னாவ சுமங்கல தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார். இதனையடுத்து ஏனையவர்களும் விலகிச் செல்லலாம் என்ற நிலைமை காணப்பட்டது. இந்த நிலையில் தற்சமயம் பாட்டலி சம்பிக்க ரணவக்க செயலர் பதவியில் இருந்து விலக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் பதவி விலகவில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற குழுத்தலைவர் அத்துரலியே ரத்ன கூறுகிறார். ஆனால் செயலரான சம்பிக்க ரணவக்க தாம் பதவியில் இருந்து விலக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொண்டுள்ளார். ஜாதிக ஹெல உறுமய பௌத்த பிக்குமாரை முழுமையாகக் கொண்ட கட்சி என்பதால் அதில் சிஹல உறுமயவின் செயலரான சம்பிக்க ரணவக்க செயலராக இருக்க முடியாது என்ற அடிப்படையிலேயே அவரை பதவியில் இருந்து விலக்கியுள்ள தாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. இந்த நிலையில் அந் தக் கட்சிக்குள் பாரிய அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

# இந்தியா அசாம் மாநிலத்தில் பலத்த மழை

# இறந்தவர்களின் தொகை 68 இற்குமேல்

**அசாமில் பலத்த மழை பெய்து வருகிறது.இதனால் 100 கிராமங்களை வெள்ளம் அடித்துச் சென்றது நேற்று முன் தினம் ஒரே நாளில் மட்டும் மழைக்கு 68 பேர் பலியாகி இருக்கிறார்கள்.**

மேலும் அண்டை மாநிலமான மேகாலயாவில் இருந்தும் வெள்ளம் அசாமுக்குள் வருகிறது. இதனால் அசாம் மாநிலம் பெரிதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திடீர் என்று மேகாலயாவில் இருந்து வந்த வெள்ளத்தின் அளவு அதிகரித்ததாலும் அசாம் மாநிலத்தில் மழை அதிகமாக பெய்ததினாலும் கிருஷ்ணை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதில் படகு கவிழ்ந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7பேர் பலியாகியுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

மேலும் கோல்பாரா மாவட்டத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் காரணமாக 100-இற்கும் மேற்பட்ட கிராமங்கள அடித்துச் செல்லப்பட்டன இந்த கிராமங்களைச் சேர்ந்த 61 பேர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. இன்னும் ஏராளமான பேர் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது . ஏராளமான கால்நடைகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. வயல் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின மீட்புப் பணியில், விமானப் படையின் உலங்கு வானூர்தி கள் ஈடுபடுத்தப்பட்டன. வெள்ளத் தில் சிக்கிய ஏராளமான பேர் மீட்கப்பட்டு,முகாம்களில் சேர்க்கப்பட்டனர். தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



அதிகரித்து வரும் வெள்ளப் பெருக்கில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வாழைமர மிதவை மூலம் வெள்ளத்தைக் கடந்து செல்லும் ஒரு குடும்பம்.

# நேருவின் கொள்கைகள் இன்றும் எமக்குத் தேவையாக உள்ளது

## - காங்கிரஸ் தலைவி சோனியா

மதச்சார்பின்மை, பாராளுமன்ற சனநாயகம், கலப்புப் பொருளாதாரம் என்பவற்றிற்கு ஊக்கமளித்த முன்னாள் பிரதமர் ஜவர்கல்லால் நேருவின் சிந்தனைகள் இன்னும் நாட்டிற்கு அவசியம் என்று காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி கூறியுள்ளார்.

புதுடில்லியில் புகழ்பெற்ற இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் நேருவின் குறித்த கல்விமைய திறப்பு விழாவில் கலந்து கொண்ட சோனியா காந்தி இவ்வாறு கூறியுள்ளார்.

நவீன இந்தியாவின் சிற்பியான நேரு மதசார்பற்ற கொள்கையில் உறுதியாக இருந்தார் என்றும் இந்தக் கொள்கைக்கு எதிராக இன்று பெரும் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். கலப்புப் பொருளாதாரத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தவர் நேரு மக்களிடையே சமத்துவத்தை செலுத்தாத அரசுகள் நீண்டகாலம் நீடிக்க முடியாது என்றும் உறுதியாக இருந்தவர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# காஷ்மீரில் தற்கொலைத் தாக்குதல்; இருபடையினர் பலி;28 பேர் காயம்!



தீவிரவாதிகளின் தாக்குதலுக்குள்ளான இராணுவப்பேருந்து சேதத்திற்குள்ளான நிலையில் இருப்பதைக்காணலாம்.

காஷ்மீரில் இராணு வத்தினர் சென்ற இந்திய வட எல்லை பேருந்து மீது நடந்த கார்க்குண்டுத் தாக்குதலில் 2பேர் பலியானார்கள் 28பேர் படுகாயம் அடைந்தனர். காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகர் - பாரமுல்லாதேசிய நெடுஞ்சாலையில் இராணுவ வாகன அணி வகுப்பு வரிசை சென்று கொணடிருந்தது. அதில் ஒரு பேருந்தில் இராணுவ வீரர்கள் பயணம் செய்தனர்.

ஸ்ரீநகரில் இருந்து 30 கிலோமீற்றர் தூரத்தில் அந்தப் பேருந்து மீது தற்கொலைப் படை தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை நிரப்பிய காரை மோதி தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் இரண்டுபேர் பலியாயினர். இந்தத் தாக்குதலில் பேருந்தும் காரும் வெடித்துச் சிதறின. சக்தி வாய்ந்த இந்தக் கார்க்குண்டு வெடிப்பில் பக்கத்தில் இருந்த வீடுகளின் யன்னல் கதவுகளும் நொருங்கி விழுந்தன.

# பிரதமர் பதவியை சோனியா ஏற்க மறுத்தது தியாகமல்ல சிவசேனை இளைஞர் அணித்தலைவர் ராஜ்தாக்கரே

(அகோலா)

பிரதமர் பதவியை ஏற்க சோனியா காந்தி மறுத்தது அவர் செய்த தியாகம் அல்ல என்று சிவசேனை கட்சியின் இளைஞர் அணித்தலைவர் ராஜ் தாக்கரே கூறியுள்ளார்.

வாஷிம் மாவட்டத்தின் கரஞ்சலாத் பகுதியில் வெள்ளிக்கிழமை நடந்த பொதுக் கூட்டத்தில் தாக்கரே பேசியதாவது;

பிரதமர் பதவியில் அமர வாய்ப்பு வந்தும் அதை ஏற்க மறுத்ததன் மூலம் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி பெரும் தியாகம் செய்து விட்டார் என்று பேசப்படுகிறது. அப்படிக் கூறுவது வெறும் பிதற்றல் ஆகும். வெளிநாட்டைச் சேர்ந்தவர் பிரதமர் பதவியில்அமர அரசமைப்புச் சட்டம் இடம் தரவில்லை வெளிநாட்டைச் சேர்ந்தவர் , பிரதமரானால் அவர் போடும் உத்தரவை தங்களால் நிறைவேற்ற முடியாது என்று குடியரசுத் தலைவர் அப்துல்கலாமிடம் முப்படைத் தளபதியே கூறியுள்ளார். இதையெல்லாம் கருத்திற்கொண்டுதான் பிரதமர் பதவியை ஏற்க சோனியா மறுத்து விட்டார் என்றார் ராஜ் தாக்கரே.

# அவதூறு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட உமாபாரதி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்

(புதுடில்லி)

அவதூறு வழக்கில் உமாபாரதி நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜரானார். அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மத்திய பிரதேசத்தில் சட்டசபைத் தேர்தல் நடந்தது. தேர்தல் பிரசாரத்தின் போது அப்போதைய முதல் மந்திரி திக்விஜய்சிங் பற்றி பாரதிய ஜனதா தலைவர் உமாபாரதி தாக்கிப் பேசினார்.

இதைத் தொடர்ந்து போபால் நகர தலைமை நீதி மன்ற நீதிபதி நீதிமன்றில் உமாபாரதி மீது அவதூறு வழக்கை திக்விஜய்சிங் தொடர்ந்தார். வழக்கில் அவர் "இந்தூர் தொழில் அதிபரின் ரூ.1500 கோடி வருமான வரி ஊழலில் திக்விஜய் சிங்குக்கு தொடர்பு உண்டு. அவர் திருடர் கூட்டத்துக்குத் தலைவர்" என்று அவதூறாகப் பேசி இருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை இதுவரை 7 தடவை நடந்துள்ளது. ஒருமுறை கூட நீதிமன்று விசாரணைக்கு உமாபாரதி வரவில்லை. இதைத் தொடர்ந்து கடந்த 4 ஆம் திகதி மீண்டும் உமாபாரதிக்கு நீதிபதி வி.கே.துபே அழைப்பாணை அனுப்பினார். வருகிற 15 ஆம் திகதிக்குள் உமாபாரதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும். இல்லையேல் 16 ஆம் திகதி உமாபாரதி மீது கைது உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று'' அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து உமாபாரதி, போபால் நகர நீதிமன்றின் முன் நேற்று முன்தினம் ஆஜரானார். உமா பாரதி சார்பில் நீதிமன்றில் ஒரு மனுதாக்கல் செய்யப்பட்டது. மனுவில் "இந்த வழக்கில் உமா பாரதி நீதிமன்றில் ஆஜராகாமல் இருக்க அனுமதி வழங்க வேண்டும்". உமாபாரதிக்கு பிணை வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மனு 15 ஆம் திகதி விசாரிக்கப்படும் என்று அறிவித்த நீதிபதி உமாபாரதிக்கு ரூ 5 ஆயிரம் ரொக் கப் பிணை வழங்கி உத்தரவிட்டார். நீதிமன்றில் இருந்து வெளியேவந்த உமாபாரதி, நிருபர்களிடம் கூறுகையில் ஊழலை எதிர்த்து தொடர்ந்து போராடுவேன் என்று குறிப்பிட்டார்.

# வடகிழக்குப் பகுதிகளில் நடந்த தீவிரவாதத் தாக்குதலுடன் பாகிஸ்தான் உளவுத்துறை அமைப்புக்குத் தொடர்பு

## - இராணுவ மந்திரி பிரணாப் முகர்ஜி

(புதுடில்லி)

இந்திய வடகிழக்குப் பகுதிகளில் நடந்த தீவிர வாதிகளின் தாக்குதல் சம்பவங்களுடன் பாகிஸ்தான் உளவு நிறுவனத்திற்கு தொடர் பிருப்பதாக இந்திய இராணுவ மந்திரி பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

புது டில்லியில் பட்டமளிப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பி ரணாப் முகர்ஜி தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

"வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாதிகள் நடத்தி வரும் தாக்குதலால் பொதுமக்கள் அமைதியற்ற சூழலில் வாழ்ந்து வருகின்றனர். தற்போது நடைபெற்று வரும் தீவிரவாத செயல்களுக்கு 'பொடொ' மற்றும் 'உல்பா' தீவிரவாதிகளும் தான் காரணம்.

தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய பகுதிகளில் பொலிசாரும், துணை இராணுவப்படையினரும் தற்போது உஷார் படுத்தப்பட்டுள்ளனர். பாகிஸ்தானின் 'ஐ.எஸ்.ஐ' உளவு நிறுவனத்துக்கும் வடகிழக்கு மாநில தாக்குதலில் பங்கு இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது. இந்தப் பகுதியில் தீவிரவாதத்தை ஒடுக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது." என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# மாராட்டிய மாநில சட்டசபைத் தேர்தல்; சூடுபிடிக்கிறது பிரச்சாரக்களம்

மராட்டிய சட்டசபைத் தேர்தலுக்கான பிரசாரம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. பிரதமர் மன்மோகன் சிங்,பாரதிய ஜனதா தலைவர் வாஜ்பாய் ஆகியோர் நேற்று சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரசாரம் செய்தார்கள்.

288 உறுப்பினர்களைக் கொண்ட மராட்டிய மாநில சட்டசபைக்கு வருகிற 13-ந் திகதி தேர்தல் நடைபெறுகிறது.

இந்தத் தேர்தலில் ஆளும் காங்கிரஸ் சரத்பவாரின் தேசியவாதக் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. இந்த கூட்டணியில் இந்தியக் குடியரசுக் கட்சியும் இடம் பெற்றுள்ளது. அதேபோல் பாரதீய ஜனதாவும் சிவசேனாவும் கூட்டணி அமைத்து தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றன.

ராஷ்டிரீய ஜனதாதளம் சமாஜ்வாடி பகுஜன் சமாஜ் என பல்வேறு கட்சிகள் களத்தில் இருந்தாலும் மேற்கண்ட 2கூட்டணிகளுக்கும் இடையே தான் கடும் போட்டி நிலவுகிறது எனத் தெரிய வருகிறது தேர்தல் திகதி நெருங்கி விட்டதால் பிரசாரம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது அரசியல் தலைவர்களும், வேட்பாளர்களும் மும்முரமாக பிரசாரத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.நேற்று பிரதமர் மன்மோகன்சிங்,முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆகியோர் பிரசாரம் செய்திருக்கிறார்கள்


# பொடோ சட்ட நீக்கத்திற்கு வை.கோ. கைது முக்கிய காரணம்

## - வி.பி.சிங்

(கோனவ)

பொடோ சட்டம் நீங்க வைகோவின் கைது ஒரு முக்கிய காரணமாக அமைந்தது என்று முன்னாள் பிரதமர் வி.பி.சிங் கூறினார். பொடோ சட்டத்தின் கீழ் வைகோ கைதுசெய்யப்பட்டது குறித்து நான் மிகவும் கவலைப்பட்டேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டி அவுஸ்திரேலிய அணி 217 ஓட்டங்களால் வெற்றி



பெங்களூரில் நடைபெற்று வந்த இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா 217 ஓட்டங்களால் இந்திய அணியைத் தோற்கடித்தது.


இவ் வெற்றி மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா 1-0 என்ற நிலையில் முன்னணி வகிக்கிறது.

நான்கவாது நாளான நேற்று முன்தினம் 457 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா, அவுஸ்திரேலிய வீரர்களின் அனல் பறக்கும் பந்து வீச்சால் விக்கெட்டுக்களை மளமளவெனப் பறிகொடுத்தது. இதனால் அன்றைய ஆட்ட நேர முடிவில் இந்தியா 6 விக்கெட் இழப்பிற்கு 105 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ராவிட் 47 ஓட்டங்களுடனும், பதான் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இறுதி நாளான நேற்று ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் ராவிட் அரைச்சதம் அடித்தார்.இருவரும் பொறுமையுடனும், நிதானத்துடனும் அவுஸ்திரேலிய வீரர்களின் பந்துவீச்சை எதிர் கொண்டனர்.

அணியின் எண்ணிக்கை 118



ஆக இருந்தபோது ராவிட் ஆட்டம் இழந்தார். இதனையடுத்து களமிறங்கிய கும்ளே 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து 9 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக ஹர்பஜன்சிங், பதானுடன் இணைந்தார் இருவரும் அதிரடியாக ஆடினர்.

பதான் அரைச் சதம் அடித்தார் இது அவரது முதல் அரைச் சத



மாகும். மதிய உணவு இடைவேளையின் போது இந்திய அணி 8 விக்கெட் இழப்பிற்கு 197 ஓட்டங்களை பெற்றிருந்தது. பின்னர் 239 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்து 217 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ராவிட் 60, இர்பான் பதான் 54, ஹர்பஜன்சிங் 42 ஓட்டங்களை முறையே அதிக பட்சமாகப் பெற்றனர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக முதல் போட்டியிலேயே சதமடித்தஅவுஸ்திரேலியாவின் மைக்கல் கிளார்க் தெரிவானார்.

# அதிக விக்கெட் வீழ்த்தியவர் சாதனையை சென்னை டெஸ்டில் வோர்ன் நிகழ்த்துவார்?



டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்களின் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவர் முரளிதரன். இலங்கை வீரரான இவர் 91 டெஸ்ட் போட்டிகளில் 532 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இவருக்கு அடுத்தபடியாக அவுஸ்திரேலிய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான வோர்ன் உள்ளார். அவர் 527 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.

தற்போது பெங்களூரில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் வோர்ன் முதல் இன்னிங்சில் 2 விக்கெட்டும், 2ஆவது இன்னிங்சில் 2 விக்கெட்டும் எடுத்துள்ளார். இதன் மூலம் அவர் 531 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

முரளிதரன் சாதனையை அவர் முறியடிக்க இன்னும் 2 விக்கெட்டுக்களே தேவை. பெங்களூர் டெஸ்டின் கடைசி நாளான நேற்று அவர் மேலும் 2விக்கெட்டுக்கள் கைப்பற்றி சாதனைபடைப்பார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவரால் முடியவில்லை. சென்னை டெஸ்டில் அவ் வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முரளிதரன் (இலங்கை) 532, வோர்ன் (அவுஸ்திரேலியா)531, வோல்ஸ (மேற்கிந்தியத்தீவு) 519, மெக்ராத் (அவுஸ்திரேலியா)440, கபில்தேவ் (இந்தியா) 434.

# போட்டி நடுவருடன் சர்ச்சை ஷேவாக்கிற்கு அபராதம்




அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் போது நடுவரின் தீர்ப்புக்கு முரண்பட்ட குற்றத்திற்காக இந்திய அணி வீரர் வீரேந்திர ஷேவாக்கிற்கு 1,400 பவுண் தண்டம் விதிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியின் 4 ஆவது நாளன்று ஷேவாக் விக்கெட்டை மறைத்தாா. (LBW) என்ற முறையில் வழங்கப்பட்ட தீர்ப்பையடுத்து நடுவரோடும் எதிரணி வீரர்களோடும் வாக்குவாதப்பட்டார். பந்து ஷேவாக்கின் மட்டையில் பட்டு கால்காப்பில் பட்டது. இதனைக் கவனியாது பௌடன் ஆட்டமிழப்பை வழங்கியமை தொலைக்காட்சியில் மறு ஒளி பரப்புச் செய்யப்பட்டது.

பின்னர் சந்தர்ப்பத்தையும் சாட்சிகளையும் கருத்திற்கொண்டு அவருக்குக் கொடுப்பனவில் 65 வீதத்தை வழங்கப் பணிக்கப்பட்டதாக போட்டி நடுவர் றஞ்சன்மடுகல்ல தெரிவித்துள்ளார்.

# பிரேசிலின் நட்சத்திர வீரர் ரொனால்ட்டோ சிகிச்சைக்குப் பின் மீண்டும் களத்தில்



தென்னமெரிக்க கால்பந்து ரசிகர்கள் மட்டுமல்லாது உலக ரசிகர்களையும் மகிழ்விக்கத் தயாராகிவிட்டார் பிரேசிலைச் சேர்ந்த நட்சத்திர கால்பந்து வீரர் ரொனால்டோ.

தொடைத்தசையில் மேற்கொண்ட அறுவைச்சிகிச்சை காரணமாக அவர் விளையாடாமல் இருந்து வந்தார்.

2006 உலகக் கோப்பை கால்பந்தாட்டத்துக்குத் தகுதி பெறுவதற்கான லீக் ஆட்டங்கள் தென்னமெரிக்கக் கண்டத்தில் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றன.

லீக் ஆட்டங்களில், பிரேசில் அணி 16 புள்ளிகளைச் சேர்த்து முன்னிலை பெற்றுள்ளது. ஆர்ஜென்டீனா 2-ஆம் இடத்தில் உள்ளது.


முதல் 4 இடங்களைப் பெறும் அணிகள் உலகக் கோப்பை போட்டியில் விளையாடும்.



ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனையான ஷெரபோவா,மஷோனா (அமெரிக்கா) வுடன் மோதினார். இதில் ஷெரபோவா 6-0, 6-1 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றுச் சம்பியன் பட்டம் வென்றார்.




# பத்தாயிரம் டிக்கெட் விற்பனை



ஜப்பானில் நடைபெற்ற பெரன்ஸ பார்முலா-1 கார் ஓட்டப் பந்தயத்தில் சம்பியனாகிய மைக்கல் சூமெக்கர்(வலது) பிரிட்டன் சாரதி ஜென்சன் புற்றொன்னுடன் 'ஷம்பக்னெ' என்ற பிரெஞ் மதுவை விசிறியடித்துக் கொண்டாடுகிறார்.

இந்திய-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 2-ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வருகிற 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்க இருக்கிறது. இந்தப் போட்டிக்கான டிக்கெட் விற்பனை கடந்த 3 ஆம் திகதி தொடங்கியது. ரூபா 200, ரூபா-600, ரூபா-700, ரூபா-800, ரூபா-900, ரூபா-1200, ரூபா1,500, ரூபா 1,800, ரூபா 3000,ரூபா-7000, ரூபா-8000 ஆகிய விலையில் டிக்கெட்டுக்கள் விற்கப்படுகின்றன. மொத்தம் 43 ஆயிரம் பேர் அமரும் வசதிகொண்ட இந்த ஸ்டேடியத்தில் 23 ஆயிரம் டிக்கெட்டுக்கள் விற்பனை செய்யப்படுகின்றன. நேற்றுவரை மொத்தம் 10 ஆயிரம் டிக்கெட்டுக்கள் விற்பனை யாகியுள்ளன. ரூபா 8.000 விலையிலுள்ள டிக்கெட் முழுவதும் விற்றுத் தீர்ந்துவிட்டது. இதுவரை ரூபா 70 லட்சத்துக்கு டிக்கெட் விற்பனை நடந்துள்ளது.

## 2ஆம் லெப்.மாலதி நினைவாக

# மகளிர் கால்பந்து இறுதிப்போட்டி கிளி. மாவட்ட அணி சம்பியனானது

2ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் சிறப்பிக்கும் முகமாக நடாத்தப்பட்ட மாவட்ட மகளிர் அணிகள் கலந்துகொண்ட கால்பந்து சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணி சம்பியனானது.

நேற்று மாலை 4 மணிக்கு மருதநகர் உதய தாரகை மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியை 8-0 என்ற கோல் எண்ணிக்கையில் கிளி. மாவட்ட அணி தோற்கடித்தது.

இதில் அரசலா 3கோல்களையும் நிலமகள் 2 கோல்களையும், இசைவாணி, சுடரினி, நிலாமதி ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் போட்டனர்.

இப் போட்டியின் பிரதம நடுவராக புவனேந்திரராஜாவும், பக்க நடுவர்களாக சிவலிங்கம், பிஜ



சீலன் ஆகியோரும் கடமையாற்றினர்.

முன்னதாக இரு அணி வீராங்கனைகளையும் மாலதி படையணி சிறப்புப் தளபதி கேணல் விதுஷா, சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா மற்றும் போர்ப் பயிற்சி மகளிர் பொறுப்பாளர் அஜந்தினி, விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அறிமுகம் செய்யப்பட்டனர். (கு.ச,தீ.லோ)



கிளி.அணி




யாழ்.அணி

# தமிழீழ தேசிய மகளிர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வலைப்பந்தாட்டப் பயிற்சி முகாம்

தமிழீழ தேசிய மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் இணைந்து நடாத்திய 13,14 வயது பாடசாலை மாணவிகளிற்கான ஒரு நாள் வலைப்பந்தாட்டப் பயிற்சி முகாம். கடந்த சனியன்று காலை 8.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்பயிற்சிப் பாசறைக்கு பிரதம விருந்தினராக வன்னி பா.ம.உறுப்பினரின் துணைவியார் திருமதி சுகந்தி கிஷோரும், வவுனியா பிரதேச செயலாளர் திருமதி சாள்ஸ், வவுனியா கல்வியற்கல்லூரி உடற்கல்வி விரிவுரையாளர் திரு.த.ம.தேவேந்திரன், வவுனியா அரசியல்துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் செல்வி பிருந்தா, வவுனியா மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் தமிழ்மாறன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வவுனியா வலைப்பந்தாட்ட சங்க தலைவர் திருமதி றொனால்ட் சிறிகாந்தா தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. 2ஆம லெப். மாலதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை வவுனியா மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் பிருந்தா ஏற்றி வைத்தார். பொதுச் சுடரினை பிரதம விருந்தினர்கள் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மலரஞ்சலி இடம் பெற்றது. பின்னர் பயிற்சிகள் ஆரம்பமாகின. பயிற்சிப் பாசறைக்கான நெறிப்படுத்தல் வவுனியா கல்வியற்கல்லூரி உடற்கல்வி விரிவுரையாளர் தேவேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் 200 மாணவிகள் கலந்து கொண்டனர்.



## சிந்தனைக்கு

சத்தியத்துக்காகச் சாகத் துணிந்து விட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 11-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# தற்போதைக்கில்லை!

விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் அண்மையில் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக சமிஞ்ஞைகள் எதுவும் தெரிவதாக இல்லை. சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே தரப்பின் உயர் மட்டப் பிரதிநிதிகள் - குறிப்பாக, நோர்வேயின் வெளிவிவகார மற்றும் பிரதிவெளிவிவகார அமைச்சர்கள் இவ்வாண்டு இறுதிக்குள் கொழும்பு வருவதற்கான வாய்ப்புக்கள் எதுவும் இருப்பதாகவும் இல்லை.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, “தேசிய சமாதான ஆலோசனைக்குழு” ஒன்றை அமைத்திருப்பினும் சரி, அரசாங்கத் தரப்பில் இடைக்கால நிர்வாக நகல் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்படவிருப்பதாக கூறிக்கொண்டாலும் சரி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், தேசிய சமாதான ஆலோசனைக்குழுவினராலோ அன்றி அரசாங்கம் தயாரித்துள்ளதாகக் கூறப்படும் இடைக்கால நிர்வாக சபை நகல் திட்டத்தினாலோ சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படப் போவதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியாததொன்றல்ல. ஏனெனில் இவற்றால் அரசியலில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படுவதற்கான அரசியல் சூழ்நிலை தற்பொழுது இல்லை என்பது அரசாங்கத்திற்கு நன்கே தெரியும்.

அவ்வாறு இருந்தும், அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்பது ஆட்சியாளருக்குக் குறிப்பாக, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஏற்பட்டுள்ள தேவையின் நிமிர்த்தத்தின்ஆகும். அதாவது, தற்போதைய சூழ்நிலையில் இனப்பிரச்சினை விடயத்தை இழுத்தடித்தல் என்பது மட்டுமே அவரது தேவையாகவுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்து இன்று அனைத்திலும் தலையாய பிரச்சினை தமது அதிகாரத்தைய தொடர்ந்தும் எவ்வாறு தக்கவைப்பது என்பதே. சனாதிபதியாகவோ அன்றி பிரதமராகவோ எவ்வாறு பதவியில் தொடர்வது என்பதே ஆகும். அதாவது, அடுத்த ஆண்டில் முடிவுறும் சனாதிபதிப் பதவிக் காலத்தின் பின்னர் அதிகாரத்தில் எவ்வாறு இருப்பதென்பதே ஆகும். இக்காலப்பகுதிக்குள் அவர் தொடர்ந்தும் அதிகாரத்தில் நீடிப்பதற்கான வழி வகைகளைக் கண்டறிய வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

தற்போதைய அரசியல் யாப்பின் பிரகாரம் தனது பதவிக் காலத்தை நீடிக்க வாய்ப்பில்லை என்பது சனாதிபதி சந்திரிகாவிற்கு நன்கு தெரியும். ஆகையினால், ஏதேவொரு வழி முறையிலாயினும் ஆட்சி அதிகாரத்தில் நிலைத்திருப்பதற்கான முயற்சியே அவரது முக்கிய குறிக்கோளாகும். இதற்கு எத்தகைய வழிவகைகளையும் அவர் பரிசீலிக்கத் தயாராகவே உள்ளார்.

இந்நிலையில், மீண்டும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வழிவகைகளையோ அன்றி பதவிக் காலத்தை நீடிப்பதற்கான வழிவகைகளையோ கண்டறிதல் அல்லது சனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து பிரதமராகப் பதவி ஏற்பதற்குரிய வழிவகைகளைத் தேடுவது என்பதே சனாதிபதி சந்திரிகாவினதும், அவரின் ஆதரவாளர்களினதும் முக்கிய நோக்கமாகவுள்ளது.

இந்நிலையில், அரசாங்கத்திற்கு நெருக்கடி தரக் கூடியதான எந்தவகையிலான செயற்பாடுகளிலும் இறங்குவதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராக இல்லை. அதாவது, விடுதலைப்புலிகளுடன் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க அவர் தயாராக இல்லை. ஏனெனில், இத்தகையதொரு முயற்சி ஜே.வி.பி.யுடன் முரண்பாட்டைத் தீவிரமாக்குமகையால் சமாதானப் பேச்சுவார்த்தை என்பதை அவர் தற்போது முதன்மையானதாகக் கொள்ள தயாராக இல்லை.

ஆகையினால், இவ்வாண்டின் இறுதிக்குள்ளோ அடுத்த ஆண்டின் முற்பகுதிக்குள்ளோ சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக இல்லை. அவ்வாறு ஆரம்பிப்பதானால் சனாதிபதி சந்திரிகா நாட்டின் நலன் கருதி அர்ப்பணிப்புடன் கூடிய தீர்மானங்களை மேற்க் கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும். ஆனால், சனாதிபதி அதிகாரத்தில் நீடிப்பதற்குக் காட்டும் ஆர்வம் நாட்டிற்காக அர்ப்பணிப்புச் செய்வதில் காட்டியதாக அவரின் கடந்த கால வரலாற்றில் பதவிகள் இல்லை.

# இலவசமாக வழங்கப்படும் கல்வியைப் பயன்படுத்தி வேலையைப் பெற்று பொருட்களை வாங்குக

## விலைவாசியைச் சமாளிக்க வழி கூறுகிறார் சந்திரிகா

(கொழும்பு)

நாட்டில் கல்வி, சுகாதாரம், பாதை, நீர்ப்பாசனம் என்பன இலவசமாக வழங்கப்படுகின்றன. இவற்றை உபயோகித்து கல்வி, சுகாதாரம் என்பனவற்றை மேம்படுத்தி கல்வியினுடாக வேலை வாய்ப்பைப் பெற்று அதிகரிக்கும் பொருட்களின் விலையைச் செலுத்தத் தயாராக வேண்டும் என சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

கம்பாகவில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, உலக சந்தையில் எண்ணெய்யின் விலை உயர்வடையும் போது நாட்டு மக்களுக்கு சலுகைகளை வழங்குவது கடினமான விடயம் இவ்வாறு செய்தால் நாட்டில் பணவீக்கம் உயர்வடையும் இதனைக் கடவுளாலும் தடுத்து நிறுத்த முடியாது. இதன் மூலம் இலவச உணவு மற்றும் நிவாரணம் என்பனவற்றையும் நிறுத்த வேண்டி ஏற்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

# சனாதிபதியின் 17 ஆலோசகர்களுக்கு மேலதிகமாக 10 லட்.ரூபா கொடுப்பனவு

சிறிலங்கா சனாதிபதியின் 17 ஆலோசகர்களுக்கும் ஒரு மில்லியன் ரூபா மேலதிக கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மனோ தித்தவெல ஆகக்கூடுதல் கொடுப்பனவாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் வாகன எரிபொருள் கொடுப்பனவையும் பெற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை சனாதிபதிக்கு வழங்குவது இவருடைய பணியென சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இவருக்கு அடுத்தபடியாக சட்ட ஆலோசகர் நைகல் ஹட்ச் ஊடகத்துறை மற்றும் தொடர்பாடல் பிரிவு ஆலோசகர்கள் திக்கிரி நிஷாந்த ரணதுங்க ஆகியோர் 75 000 ரூபாவை பெற்று வருவதாகவும் தெரியவந்துள்ளது.

# ஐ.தே.க.வின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்கியது

## -ஐ.தே.க.பா.உ. மிலிந்தமொறகொட தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வந்த சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரணமான ஆதரவை வழங்கி வந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழுக்கு அவர் வழங்கிய செவ்வியில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு என்ற விடயம் இந்தியாவின் அனுசரணையிலேயே மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இந்தியாவின் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றங்கள் இல்லை. அது 2001 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் முன்னெடுத்து வந்த சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்கியதாகவும் மிலிந்த மொறகொட மேலும் குறிப்பிட்டுள்ளார். (32)

# ஐ.தே.க.மூத்த உறுப்பினர்கள் 60 பேரை கட்சி முக்கிய பதவிகளிலிருந்து விலக்கமுடிவு

ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சுமார் 60 பேர்வரையில் அந்தக் கட்சியின் முக்கிய பதவிகளில் இருந்து விலக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் கட்சியின் வெற்றிக்குப் பங்களிப்பு வழங்கத் தவறியவர்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் இவர்களை கட்சி நடவடிக்கைகளில் இருந்து வெளியேற்ற கட்சியின் உயர் பீடம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக புதிய அணி ஒன்று தோற்றம் பெற்று வருவதாகவும்.இதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் கட்சித் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே கட்சிக்குள் பல்வேறு பட்ட பிரிவுகள் தோன்றியிருப்பதாகத் தெரியவருகின்றது.இந்தப் பிரிவுகள் எதிர்காலத்தில் கட்சியைப் பிளவுபடுத்தும் விதமாக வளர்ச்சி பெறுவதைத் தடுக்கும் முகமாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த நடவடிக்கையினை மேற்கொள்ளத் தீமானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# பொலநறுவை முஸ்லிம் கிராமங்களுக்கு மு.கா.தலைவர் அஷ்ரப் விஜயம்

பொலநறுவை மாவட்டத்தின் பள்ளியகொடல்ல, அகபர்புரம், பங்குரான, அகமத்புரம் ஆகிய முஸ்லிம் கிராமங்களின் பாதுகாப்பு குறித்து ஆராய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அங்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப் புறத்தில் அமைந்துள்ள இந்தக் கிராமங்களுக்கு விஜயம் செய்த அவர் அங்குள்ள நிலவரங்களைக் கேட்டறிந்து கொண்டார். 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த கிராமங்களில் இருந்து வெளியேறிய மக்கள் போர் நிறுத்த உடன்பாட்டை அடுத்து மீள்குடியமர்ந்து வருகின்றனர். தற்சமயம் இங்கு 60 வீதமான சுமார் 800 குடும்பங்கள் மீள்குடியமர்ந் துள்ளன. எனினும் அந்தக் குடும்பங்களுக்கு உரிய எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. இந்த நிலையில் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக உரிய அதிகாரிகளுடன் ரவூப் ஹக்கீம் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (32)





நேற்று கிளி.யில் நடைபெற்ற தமிழீழ பெண்கள் எழுச்சிநாளும் 2ஆம் லெப். மாலதி நினைவு நாளும்....

# இ.த.அ.திட்டவரைவு அடிப்படையில் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்குக

## - சாட்டுப்போக்கு வேண்டாமென சந்திரிகாவுக்கு ரணில் கடிதம்

விடுதலைப்புலிகளுடன் அவர்களுடைய தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை முன்னெடுக்கப் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எப்பொழுதும் தயாராக உள்ளது. ஆகவே இது தொடர்பில் பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும், முழுமையான பொறுப்பும் கடமையும் அரசிடம் தான் இருக்கின்றது என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

சமாதானத்துக்கான தேசிய ஆலோசனைச் சபையில் அங்கம் வகிப்பது தொடர்பாக மீண்டும் ஒருமுறை பரிசீலிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாக அண்மையில் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதற்குப் பதில் அளித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, ஏற்கனவே அரசாங்கம் என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி தமது ஆலோசனையை 2003 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பித்தது. இதனையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் தமது யோசனையாக இடைக்கால தன்னாட்சி வரைபை அதே ஆண்டு ஒக்ரோபர் மாதம் சமர்ப்பித்தனர். அந்த யோசனையானது அரசாங்கம் சமர்ப்பித்த யோசனையைப் பொறுத்த வரையில் சமமாகக் கருத முடியாது என்ற போதும், அது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசாங்கம் முன்வந்தது அது தொடர்பாக எமது அரசாங்கம் அதே ஆண்டு நவம்பர் முதலாம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அறிவித்தது. இந்த நிலையில் சனாதிபதி உடனடியாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்,அதேநேரம் அந்தப் பேச்சு வார்த்தையில் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்கும் வேளையிலேயே தேசிய ஆலோசனை சபையின் அவசியம் இருக்கிறது.

இதற்குப் பின்னரும் சாட்டுப் போக்குச் சொல்லி இதனைக் காலந்தாழ்த்த முடியாது.

ஆகவே பிரதான எதிர்க்கட்சியைப் பொறுத்தவரை தமது நிலைப்பாடெல்லாம் விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

சனாதிபதி தனது கூட்டணிக் கட்சிகளினிடையே ஏற்பட்ட முரண்பாடுகளை, விசேடமாக ஜே.வி.பி.யின் அனுசரணையைப் பெற்று அவர்களுக்கு விடயத்தைத் தெளிவுபடுத்தி பேச்சு வாத்தைகளை முன்னெடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (32)

## -புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து-

# கொழும்புக்குச் செல்வோர் குறித்து விபரம் திரட்டப் படையினர் நடவடிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து கொழும்புக்கு வருபவர்கள் மற்றும் அவர்களுக்கு உதவியளிப்பவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய வர்த்தகர்கள் தொடர்பாக விபரங்களைத் திரட்ட படைத்தரப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏற்கனவே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் போர் நிறுத்த உடன்பாட்டின் பின்னர் அவை நிறுத்தப்பட்டிருந்ததாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்

இந்த விபரங்கள் பெரும்பாலும் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிய, கொள்ளுப்பிட்டிய, கொட்டாஞ்சேனை, மற்றும் கிராண்ட்பாஸ், மட்டக்குளிய போன்ற இடங்களில் இருந்தே திரட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

(32)

# போராட்டத்தில் இணையச் சென்ற இரு சிறுமிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் போராட்டத்தில் இணையச்சென்ற இரு சிறுமிகளை விடுதலைப் புலிகள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அம்பிலாந்துறை அரசியல்துறைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சசிமதி இவ்விரு சிறுமிகளையும் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளார். உதயகுமார் வளர்மதி மற்றும்அன்னசேகரி நிலோஜினி ஆகிய இரு சிறுமிகளுமேஇவ்வாறு அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர்.

# ஊர்காவல் படையினரை விடுவிப்பதற்கான கால அவகாசம் இன்று முடிவடைகின்றது

திருகோணமலை கோமரங்கடவல பிரதேசத்தில் விடுதலைப் புலிகளினால் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சிங்கள ஊர்காவல் படையினரை விடுவிப்பதற்காக சிங்கள பௌத்த பேரினவாத அமைப்பொன்று அரசாங்கத்திற்கு விடுத்த கால அவகாசம் இன்றுடன் முடிவடைகின்றது.

இக்கால அவகாசத்தை வடக்கு-கிழக்கு சிங்கள அமைப்பே விடுத்துள்ளது. இன்று குறிப்பிட்ட இரண்டு ஊர்காவல் படை வீரர்களும் விடுவிக்கப்படாது விட்டால் நாளை வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அந்த அமைப்பின் செயலாளர் அநுரா பண்டார தகவல் வெளியிட்டுள்ளார். இதன் மூலம் பிறிமா ஆலையிலிருந்து கோதுமை மா விநியோகமும், சீனன்குடா எரிபொருள் களஞ்சியத்திலிருந்து எரிபொருட்களும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதில் தடை ஏற்படும் என்றும் அவர் தெரிவிக்கின்றார். (32)

# அரசியல் யாப்பில் மாற்றம் கருத்துக்கணிப்பிற்கு அரசு திட்டம்!

சிறிலங்கா அரசியல் யாப்பில் மாற்றம் கொண்டு வருவது தொடர் [illegible] மக்கள் கருத்துக் கணிப் [illegible]ற நடத்த அரசு திட்டமிடுவ[illegible]க அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இது தொடர்பாக அமைக்கப்பட்ட சட்டத்தரணிகளின் குழு ஒன்றுடன் அரசு நீண்டநேர ஆய்வுகளை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகா தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் சனாதிபதியாகப்பதவி வகிப்பது அல்லது நிறைவேற்றதிகாரமுள்ள பிரதமராக அமைச்சரவையில் அங்கம் வகிப்பதற்கு ஏற்றவாறு அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவர இருப்பதாக செய்தியொன்று கூறுகிறது.

இந்த அரசு பதவிக்கு வரமுன்பு தனது கொள்கை பிரகடனத்தில் அரசியலமைப்பை மாற்றுவோம் எனவும் அதற்கு தமக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் எனவும் கேட்டிருந்தது. எனினும் அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்காததால் பிரச்சினை தொடர்ந்து சென்று தற்போது இந்த முடிவுக்கு வந்துள்ளது.(32)

## வெளிநாட்டு....

முயற்சிகள்குறித்துக் கேட்டறிந்து கொண்டுள்ளார். இக்கருத்தரங்கில் சமாதான கற்கைகளுக்கான ஐரோப்பிய பல்கலைக்கழக மையத்தின் விஞ்ஞானவியல் பணிப்பாளர் டாக்டர் டியரிச்பிச்சரும் கலந்து கொண்டார்.

## இலங்கை....

இனப்பிரச்சினை விவகாரத்தில் கனடிய அரசின் பங்களிப்பை விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளும் எனவும் தெரிவித்துள்ள எரிக் சூல்ஹெய்ம், கனடிய அரசு தகுந்த உதவிகளை வழங்க முன்வரவேண்டும் எனவும் இந்தச் சந்திப்பின்போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கனடா உரிய உதவிகளை வழங்கும் என இச் சந்திப்பின் போது மரியா மின்னா உறுதியளித்துள்ளார்.

இந்த வருடத்தின் இறுதி வாரங்களில் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், இந்த விஜயத்தின்போது அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் தான் அழைத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். (32)

# வீடு தீக்கிரை

அக்கரைப்பற்றில் விடுதலைப் புலிகள் போராளி ஜுட் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய தேசவிரோதியின் வீடு நேற்று முன்தினம் நள்ளிரவு பொதுமக்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம் திருக்கோவிலில் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தின் போது வீட்டில் எவரும் இருக்கவில்லை என்றும், இவரின் குடும்பத்தில் மூவர் கருணா அணியில் இருப்பதாகவும் அப்பிரதேசமக்கள் தெரிவிக்கின்றார்கள். போராளி ஜுட் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத்தப்பிச் சென்ற சமயம் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தேசவிரோதி வித்தகன் என்பவருடைய வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இவரது சடலம் நேற்று உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ள போதிலும், அவரது வீட்டிற்கு எடுத்துச்செல்லப்படவில்லை.

# சமாதான நடவடிக்கையை முன்னெடுக்க பலம்வாய்ந்த இராணுவம் இருக்கவேண்டும்

## சிறீலங்கா இராணுவத்தளபதி சாந்தகொட்டேகொட

(கொழும்பு)

சமாதான செயற்பாடுகளை முன்கொண்டு செல்லவேண்டுமாயின் இலங்கை இராணுவம் பலம் வாய்ந்ததாக நாட்டில் நிலைநிறுத்தப்பட வேண்டும் என இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட கூறியுள்ளார். இலங்கை இராணுவத்தின் ஐம்பத்தைந்தாவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்து சமாதானத்தை முன்கொண்டு செல்வதற்குத்தேவையான உயர்ந்த பட்ச பங்களிப்பைச் செலுத்துவது எமது பொறுப்பாகும்.

இந்தப்பொறுப்பை பலம் பொருந்திய இராணுவத்தாலேயே செய்யமுடியும். மாறுபடும் சூழலுக்கேற்ப மென்மேலும் பலமடைதல் அவசியமானது. அதற்காகப்பயிற்சிகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளவேண்டும் என்றார் அவர்.

## 2 ஆம் லெப்....

நீக்கம் செய்துவைக்க, உருவச்சிலையினை மாலதிபடையணி சிறப்புத்தளபதி கேணல் விதுசா அவர்கள்திறந்துவைத்தார். அடுத்து 2ஆம்லெப். மாலதியின் உருவச்சிலைக்கு அவரது தந்தையாரான பேதுரு அவர்கள் மலர்மாலை அணிவித்துவைக்க, தொடர்ந்து 2ஆம் லெப். மாலதியின் சகோதரி தொம்மாசியா அவர்களும், செஞ்சோலை மகளிர் பொறுப்பாளர் ஜனனிஅவர்களும் தொடர்ந்து கண்ணிவெடிப்பிரிவு மகளிர் பொறுப்பாளர் அஸ்வினி அவர்களும், தமிழர் புனர் வாழ்வுக்கழக நிர்வாகப் பொறுப்பாளர் அமிர்தாப் அவர்களும், கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி அவர்களும் மலர் மாலைகளை அணிவித்தனர். தொடர்ந்து மலர் வணக்கத்தினை கடற்புலிகளின் மகளிர் சிறப்புத் தளபதி விடுதலை அவர்கள் ஆரம்பித்து வைக்க தொடர்ந்து போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் மலர் வணக்கம் செய்தனர், அடுத்து 2ஆம் லெப். மாலதியின் உருவச்சிலையினை வடிவமைப்புச் செய்த கவிஞர் நாவண்ணன் அவர்களுக்கான பாராட்டுப் பரிசினை கேணல் ஜெயம் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். (ச,கு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.